GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY
NOV 1915

கடவுள்துணை.

செந்தமிழ்

தொகுதி-கஉ.] ஆனந்தஹு புரட்டாசிமீ [பகுதி-கக.
Vol. XII. September—October, 1914. No. 11.

பஞ்சாயமுதலியசங்கங்களின் பழமையும் முறைமையும்.

"செந்தமிழ்" (தொகுதி கஉ பகுதி கம-ல்) ௩௬௮-ம்பக்கத் தொடர்ச்சி.

———:(o):———

தடுத்தாட்கொண்டபுராணம் செய்யுள் 33:—

வந்துதிருமாமறைமணத்தொழிறொடங்கும்
பந்தரிடைநம்பியெதிர்பன்னுசபைமுன்னின்
றிந்தமொழிகேண்மினெதிர்யாவர்களுமென்றுன்
முந்தைமறையாயிரமொழிந்ததிருவாயான். (என்பது)

இதில் ஒருசபைசொல்லப்பட்டிருக்கிறது; அது, மறைமணத் தொழில்தொடங்கும்பந்தரிடை யிருந்ததாகக் கூறப்பட்டமையால், அங்ஙனமிருப்பது விவாகமுதலிய வைதிகச்சடங்குகள்தொடங்குவ தற்கு அநுமதிகொடுக்கக்கூடியிருக்கும் பார்ப்பார்* என்னும் வைதிக சபையாயிருக்கவேண்டுமென்பதும், அது பன்னு† சபையென்று விசே டிக்கப்பட்டமையால் புத்தூர்என்னும் அச்சிற்றூரில்வேறுதக்கோரில் லாமையால் அவ்வைதிகசபையே வழக்கறுக்கும்மஹாஜனசபையாகவும் நியமிக்கப்பெற்றிருந்ததென்பதும் இவ்விருவகைநிலையில், வைதிகசபை யாய்நிற்கும்நிலையைநோக்காது, வழக்கறுக்கும் மஹாஜனசபையாய் நிற்கும்நிலையையேநோக்கி வெண்ணெய்நல்லூரார் முறையிட்டாரென்ப தும் வெளியாகின்றன.

இதனால், ஒரு காரியநிர்வாஹசங்கம் பிறிதோர்காரியநிர்வாகம் பெற்றிருந்ததுமுண்டெனவிளங்குகின்றது.

---

* இது சிலப்பதிகார அரும்பதவுரைகாரர்காட்டிய வேந்தர்க்கு - மாசனம் பார்ப்பார் என்னும் மேற்கோளில் இரண்டாவதாகவைத்தெண்ணப்பட்டது.

† இங்குப் பன்னுதல் வழக்கறுத்துரைத்தல் (அறுதியிட்டுரைத்தலுமது)

*

ஷை புராணம் செய்யுள் 49:—

குழைமறைகா திஞனைக்கோதிலாரூரர்நோக்கிப்
பழையமன்ருடிபோலுமிவனென்றபண்பின்மிக்க
விழைவுறுமனமும்பொங்கவெண்ணெய்நல்லூராயேலுன்
பிழைநெறிவழக்கையாங்கேபேசநீபோதாயென்ருர்.

தெய்வப்புலவர்திலகரான திருவாரூரரதுவாக்கின்போக்கிற் சிறிது காட்டிய இப் பாட்டிலுள்ள தொடர்களுக்கு, இன்பம்பயக்குந் தொனிப்பொருள்களெத்துணையோபலவிருப்பினும், அவற்றுள் முன் பின்ருெடர்புடையவாகி, ஈண்டைக்குவேண்டும் பொருள்பயந்து, வழக்கொடுபொருந்திய சில குறிப்புக்களைமட்டுமே, இங்கெடுத்துக் கொண்டு பொருள்விரிப்பாம். அப்பொருள்வருமாறு :—

வெண்ணெய்நல்லூர்வேதியர்வழக்காடிவந்து சபைமுன்னின்று நெறிப்படப்பேசுந்திறமைகண்டுவியப்புற்ற திருவாரூரர் அவரைப் பழையமன்ருடிபோலும்; என்றதிசங்கித்து "இவன் வல்வாயனுதலால் இச்சிற்றூர்ச்சபையில் வெல்லினும்வெல்வன்" என மனம்புழுங்கி, "இப் பொய்வழக்கை இச்சபையைவிட்டகற்றித் தக்கோருமிக்கோருமுள்ள தொரு தனியூர்ச்சபையிற்சொல்வித்தால் உண்மைவெளியாகும்" என்று தம்முள்நினைந்து, வாதியைநோக்கி "உன்வழக்கு நெறிதவறியதா யிருப்பதால் அதற்குநான் ஒருசிறிதுமிணங்கேன் ; உபயவாதிகளும் பஞ்சாயத்தீர்ப்புக்கிணங்குவதாயுடம்பட்டால் இருதலைமுறைபாடாக எச்சபையிலும் சொல்லலாம் ; இவ்வழக்கு அங்ஙனமில்லாமையால் இச்சபையிற்சொல்வது செல்லாது; நீ இவ்வூர்வாழ்பவனுயிருந்தாயா கில் ஒருதலைமுறைபாடாக இச்சபையில் நீயேசொல்வதுசெல்லும் ; அதற்குமிடமின்றி வெண்ணெய்நல்லூரானென்கிருய் ; அஃதுண்மை யானுல் அவ்வூர்ச்சபையிற்சென்று வாதியிஞெருதலைமுறைபாடாக நீயேசொல்லிக்கொள்ளென்ருரென்பதாம்.

இதிலுள்ள மன்ருடி என்னுந் தொடர்மொழிப்பொருளையாராய் வாம். அம்மொழி மன்று+ஆடி என்னும் இரண்டுமொழிகளாலாக்கப் பட்டிருக்கிறது. அவற்றுள் மன்றுஎன்பது "மன்றுள்மாறியாடிய" எனப் பொது, அம்பலம், என்னும்பொருளில் வழங்கப்பட்டிருப்பதால் சபையென்று பொருள்படுகிறது. படவே வழக்குப்பேசுந்திறமையுடை யோனை வழக்காடியென்பதுபோல மன்றிற்பேசுந்திறமையுடையோனை மன்ருடியென வழங்கிவந்தனரென விளங்குகின்றது.

மன்றுஎன்பதன் அவயவப்பொருளையுற்றுநோக்குங்கால் நன்(மை) இயைபுடையது யாது? அது நன்று என்பதுபோல மன் (அரசன்) இயைபுடையது (சபை) மன்று; அதாவது ராஜசபையெனப்பொருள் படும். இதற்கிணங்கத் தில்லைமன்று நடராஜ கோவிந்தராஜர்களி னியைபுடையதாயிருப்பதும், (கம்பர் அயோத்தியிலுள்ள பௌரஜனமாளிகைகளை வருணிக்குமிடத்து) அம்மாளிகைகள் அரசரதியைபுடையஅரமனைகள், அல்லது ராஜசபாமண்டபங்கள்போல்விளங்குவன என்னுங் குறிப்பால் 'மன்றுகளல்லனமாடமாளிகை' என்று கூறியிருப்பதும் இங்குநோக்கத்தக்கன.

ஆதலால் அரசரதியைபுபெற்ற ஐம்பெருங்குழுவுளொன்றாகிய ராஜமஹாசபையை மன்றென்றும், அம்மன்றில்நின்று நெறிப்படப் பேசுந்திறமையும் பயிற்சிமிக்குடையபழமையும்வாய்ந்தோனை பழைய மன்றாடி (அத்துவக்காத்து)என்றும்வழங்கிவந்தனரென விளங்குகின்றது.

இனி, "வெண்ணெய்நல்லூரராயேலுன், பிழைநெறிவழக்கை யாங்கேபேச நீபோதாய்என்றார்" என்றதில், பிழைநெறிவழக்கென்றது இரட்டுறமொழிதலால் நியாயவிரோதமானவழக்கு (அதாவதுபொய் வழக்கு) எனவும், வழிதப்பிவந்தவழக்கு எனவும் பொருள்படக்கிடக்கின்றது. இவற்றுள், பொய்வழக்குஎன்றதனால், இதற்குநான் ஒரு சிறிதுமிணங்கேன்என்பதும், வழிதப்பியவழக்கென்றதனால் இவ்வூர்ச் சபையில்வந்து சொல்லக்கடவதன்று. (அதாவது இச்சபையின் அதிகாரவரம்புக்குட்பட்டதன்று) என்பதும் குறித்துணரப்படும். படவே நான் சிறிதிணங்கினால் இருதலைமுறைபாடாகும். அஃதின்மையா லிஃதொருதலைமுறைபாடாயிற்று என்பதுகுறிப்பாற்றோன்றியகுறிப்பாய், வழிதப்பியவழக்குஎன்றதற்கு நிரூபகமாயிற்று.

இக்குறிப்புகளால் உபயவாதிகளும் சென்றுசொல்லும் இருதலைமுறைபாட்டிற் பஞ்சாயசபைகளுக்கு அதிகாரவரம்பு (எல்லைநிலவரையரை)யில்லையென்பதும், வாதியின் ஒருதலைமுறைபாட்டிற்கு அதிகார வெல்லைநிலம் வரையறுக்கப்பட்டிருந்ததென்பதும் வெளியாகின்றன.

இன்னும் இதற்கனுகுணமாகவே ஆங்குச்சென்றுபேசு என்றதனால் ஈங்குநின்றுசொல்லுதல் செல்லாதென்றாரென்பதும், தாமுமுடன் போவாராயிருக்கச்செய்தே யாம்போதுமென்னாது ; உன்வழக்கைச் சொல்லிக்கொள்ள நீபோதாயென்றமையால் இஃதிருதலைவழக்கன்

றென்றாரென்பதும், வெண்ணெய்நல்லூராயேல் என்றமையால் இவ்வூராயாகில் இங்குச்சொல்லுதல் செல்லுமென்றாரென்பதும் ஆகிய குறிப்புக்கள்தோன்றுகின்றன. இவற்றால் ஊர்தோறும் பஞ்சாயசபைகளிருந்தனவென்பதும், அவை ஒருதலைவழக்கிற்கே அதிகாரநிலவரம்பு வரையறுக்கப்பட்டிருந்தனவென்பதும் வெளியாகின்றன.

செய்யுள், 51, 52, 60, 63 இவற்றுள் முறையே

1. வேதபாரகரின்மிக்கார்,
2. அந்தணர் அவையின்மிக்கார்.
3. மாசிலாமறையோர்.
4. பண்பின்மிக்கமேன்மையோர், எனச் சபையோரைக்கூறியிருத்தலால் பஞ்சாயசபையோர்முழுதும், அல்லது பெரும்பாகம், அந்தணரிற்றக்கோரே தெரிந்தெடுத்துச்சேர்க்கப்பட்டிருந்தாரென்பது தெரிகிறது.

(செ) 56. "ஆட்சியில் ஆவணத்தில் அன்றிமற்றயலார்தங்கள், காட்சியில்மூன்றிலொன்றுகாட்டுவாய்" என்று சபையோர்கேட்டமையால் அநுபவம், சாசனம், வழக்காடுவோர்க்கு உடந்தையல்லாதார் கண்கூடாகக்கண்டதுகூறும்சான்று என்னுமிவற்றால் முற்காலத்தும் சபையோர் உண்மையுணர்ந்துவந்தார்களென்பது விளங்குகின்றது.

63 "இசையேனென்னவிசையுமோ" என்றதனால் பஞ்சாயசபையின் எல்லோருமொருங்கிணங்கிய (ஏகீபவித்த) தீர்ப்பு நியாயவிரோதமாயிருந்தாலும் வழக்கிழந்தவனால் மறுவழக்கிட்டு மாற்றவொண்ணா வலியுடையதாயிருந்ததென்பதும் புலப்படுகிறது.

"இன்னும்இசையேனென்ன விசையுமோ" என்று, மனத்தாலிசைந்தடங்காமையைக் குறிப்பாலுணர்த்திக்கொண்டே, வாயாலும் மெய்யாலுமடங்கினமையால், நெறிகடந்தமொழியும் செயலுமே அரசராலொறுத்தற்குரிய குற்றமாகக்கொள்ளப்பட்டனவென்பதும் வெளியாகின்றது.

இனித்திருவிளையாடலையாராய்வாம்.

(தொடரும்.)

திரு. நாராயணையங்கார்,
பத்திராதிபர்.

மாணிக்கவாசகர்காலவாராய்ச்சி.*

"செந்தமிழ்" (தொகுதி-கஉ பகுதி கo-ல்) சகஉ-ம் பக்கத் தொடர்ச்சி.

:o:

இதுகாறும் மாணிக்கவாசகரின் காலநிர்ணயஞ்செய்ய வெத்த னித்தவர்களிற் சிலர்கொள்கைகள் காலவரையறையைப்பற்றிப் பின் வருமாறுள்ளன:—ஸ்ரீமான் S. A. திருமலைக்கொழுந்துப்பிள்ளையவர்கள் கி. பி. முதல் நூற்றாண்டென்றும், ஸ்ரீமான் பொன்னம்பலம்பிள்ளை யவர்கள் இரண்டு, அல்லது மூன்றாவது நூற்றாண்டென்றும், ஸ்வாமி வேதாசலம் கி. பி. மூன்றாவது நூற்றாண்டென்றும், Mr. Wilson கி. பி. 7-வது நூற்றாண்டென்றும், போப்பையரவர்கள் 7, 8 அல்லது 9-வது நூற்றாண்டென்றும், சென்னை ஹைகோர்ட்டில் நியாயாதிபதி யாய் முன்னிருந்த Mr. Innes கி. பி. 9-வது நூற்றாண்டென்றும், பாரிஸ்நகரவாஸீ திராவிடவித்வான் Professor Julien Vinson கி. பி. 9-வது அல்லது 10-வது நூற்றாண்டென்றும், Rev. Mr. Goudie கி. பி. 8-வது நூற்றாண்டினிடைப்பட்டகாலமுதல் 10-வது நூற்றாண் டினிடைப்பட்டகாலம்வரை என்றும், ஸ்ரீமான். கோபிநாதராயரவர்கள் கி. பி. 10-வது நூற்றாண்டின்முடிபு அல்லது 11-வது நூற்றாண்டினாதி யென்றும், சர்வவிஷயக்களஞ்சியமென்றுசொல்லத்தக்க Encyclopaedia Britannica என்ற பிரபலநூலில் தமிழைப்பற்றி எழுதியிருக் கும் Dr. Rost கி. பி. 13 அல்லது 14-வது நூற்றாண்டென்றும் மாணிக்கவாசகஸ்வாமிகளுக்குக்காலங்குறிப்பிட்டு எழுதியிருக்கின்றார் கள். Mr. Nelson தாமெழுதிய Madura Manual என்றபுத்தகத்தில் மாணிக்கவாசகர் கி. பி. 819-வதுவருஷத்தில் பௌத்தசமயத்தாரோடு வாதாட இலங்கைக்குப்போனதாக மிகத் திட்டமாகச்சொல்லுகிறார். நானும் " ஆங்கவன்புகழ்ந்தநாட்டையன்பெனுநறவமாந்தி, மூங்கை யான் பேசலுற்றானென்ன யான்மொழியலுற்றேன் " என் றான்றோர் கூறியதற் கிலக்கியமாக, இத்தகைய பிரபலவித்வான்கள் ஆராய்ச்சி செய்ய எடுத்த இப் பெரும்விஷயத்தில் என்சிற்றறிவிற்கேற்கச் சொற்ப முழைத்து வாதவூரடிகள். கி. பி. நான்காவது நூற்றாண்டிற்குப் பிற் பட்டவரல்லரென்றும், ஒருவேளை 3-வது நூற்றாண்டி லிருந்திருக்கக் கூடுமென்றும் துணிந்துள்ளேன்.

---

*இது மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் பதின்மூன்றாம்வருஷக்கூட்டத்தில் வாசிக்கப்பெற்றது.

நவீன சரிதவாராய்ச்சிமுறைமைகளைக் கைக்கொண்டு இச்சைவ சமயாசாரியரின்காலத்தை இன்னதென நிர்ணயிக்கப்புகுந்தவர் கொள்கைகள் இவ்வாறாக, நம்நாட்டுப்புராதனக்கொள்கை மேற்கூறிய கருத்துக்களெல்லாவற்றிற்கும் முற்றும் மாறுபட்டதாகும். "இவர் காலம் நாலாயிரம்வருஷங்களுக்கு முன்னுள்ளதென்பது நன்குதுணியப் படும்" என்று சென்னை ஸ்ரீமான் பி. இராமநாதனவர்கள் தாமியற்றிய "The 20th Century Tamil Dictionary" என்ற அருமையான தமிழ்ப்பெயரகராதியில் வரைந்துள்ளார். எவ்விதமும் வாதவூரடிகள் சங்கப்புலவர்களுக்கு முன்தோன்றியவரென்றே நம் முன்னோர்களின் துணிபு. சங்கப்புலவர்காலம் கிருஸ்தப்தத்திற்கு முற்பட்டதெனப் பலருங்கூறியுள்ளாராகையால், வாதவூரடிகள் குறைந்தபக்ஷம் இன்றைக்கு இரண்டாயிரம்வருஷங்களுக்குமுன் வாழ்ந்துவந்தனரென்று கொள்வது சாலவும்அமையும். அற்றேல் கிருஸ்துபிறப்பதற்குமுன் நிகழ்ந்த முதல்நூற்றாண்டிற்குப் பிற்பட்டவரல்லரென்பது அனுமிக்கக் கிடக்கின்றது. இதுவே தமிழ்க்கலைஞர்களின் பெரும்பான்மையோர் கொள்கை. இதனால் இன்னவர்காலம் சற்றும் திட்டமின்றிப் பெருஞ் சந்தேகவிஷயமாகவே யிருத்தல்காணலாம்.

இவரது காலவரையறைகாரணமாகத் தம்முட்கருத்துவேறுபட்டாரனைவரும் இருசாரராகக் கூறுபடுவார்கள். ஒருசாரார் தேவாரமோதிய சைவசமயாசாரியர் மூவர்க்கும் பின்தோன்றியவர் மாணிக்கவாசகர் என்றுசாதிப்பர். மற்றொருசாரர் அம்மூவர்க்கும் வெகுகாலத்திற்கு முன்தோன்றியவர் இவர் என்று கூறுவர். மூவரில் முதல்வராகிய திருஞானசம்பந்தர் கி. பி. 7—வது நூற்றாண்டிலிருந்தனரென்றும், அவரும் அப்பரும் ஏககாலத்தினரென்றும்; சுந்தரமூர்த்தி 9-வது நூற்றாண்டி னிறுதியிலிருந்தாரென்றும் சரித்திரவல்லுநர்கொள்கை. ஆகவே, மாணிக்கவாசகர் மூவர்பின்தோன்றியவரென்றால் அவர்காலம் 10-வது நூற்றாண்டிற்குமுன்னிருத்த லரிது. இக்கருத்துக்கொண்டவர்களில் ஸ்ரீமான் கோபிநாதராயரவர்களே பிரபலஆராய்ச்சிசெய்து யுக்திபல்வு மெடுத்துரைத்து அவ்வபிப்பிராயத்தை வற்புறுத்தியிருக்கின்றார்கள். ஆனால் 13 அல்லது 14-வது நூற்றாண்டே மாணிக்கவாசகர்கால மென்று வரைந்துள்ள Dr. Rost-ம், 8, 9 அல்லது 10-வது நூற்றாண்டு அவர்காலமென்று ஊகிக்கும் Dr. Pope ஐயரவர்களும்

மாணிக்கவாசகர் தேவாரம்பாடியமூவர்க்கும் முற்பட்டவரென்றும் ஞானசம்பந்தர் மாணிக்கவாசகர்காலத்திற்கு 150 அல்லது 200 வருஷங்கட்குப் பின்தோன்றியிருக்கவேண்டுமென்றும் ஸ்திரஅபிப்பிராயம் கூறியிருக்கிறார்கள். இவ்விருவித்வான்களில் Dr. Rost கூறுங்காலம் முற்றுந்தவறுஎன்பதற்குச் சற்றும் ஐயமில்லை. அவ்வாறாயினும், வாதவூரர் ஞானசம்பந்தர்காலத்திற்கு முன்தோன்றினவராதல் எங்ஙனம் பொருந்தும்? அன்றியும், 1118-ல் அரசுகட்டில்ஏறின விக்ரமசோழன் மாணிக்கவாசகர் அருளிய திருச்சாழல்ஓத ஏற்பாடுசெய்ததாக வோர் சாஸனத்தில் வரைந்துள்ளதாய்க் காலஞ்சென்ற வெங்கய்யாஅவர்கள் கூறியிருக்கின்றார். ஆதலால் 12-வது நூற்றாண்டி றுதியில் மாணிக்கவாசகர் மகத்தானசைவசமயாசாரியராய் மதிக்கப்பட்டாரென்பது திண்ணம். மேலும் நம்பியாண்டார்நம்பிதொகுத்தருளிய திருமுறைகளில் 8-வது திருமுறையாகத் திருவாசகம்சேர்க்கப்பெற்றுள்ளது. நம்பியாண்டார்நம்பி 988-ம்வருடம் அரசுரிமைபெற்ற இராஜராஜ கோப்பரகேசரிவர்மனால் ஆதரிக்கப்பெற்ற பார்ப்பனநம்பி. ஆகவே மாணிக்கவாசகரை 10-வது நூற்றாண்டிலேயே பெரியதோர் சிவஞானச்செல்வராகக் கொண்டாடினார்கள் என்பது விளங்குகின்றது. அவ்வாறாயின் அவர்காலம் 10-வது நூற்றாண்டி றுதியெனல் ஒருசிறிதும் பொருந்ாதென்றேசொல்லலாமெனினும், அவர்மூவர்க்கும் முற்பட்டவரென்று துணிவதற்கு இக்காரணம்போதாது. அவர் மூவர்க்கும்பிற்பட்டவரே என்று ஸ்தாபிப்பான் கூறப்படும் சிலமுக்கிய நியாயங்கள் இவண் ஆராயக்கடவன. அவையாவன:—

(1) சுந்தரமூர்த்திபாடிய திருத்தொண்டத்தொகையினுள்ளே மாணிக்கவாசகர்பெய ரெடுத்தோதப்படாமை.

(2) மூவர்தேவாரத்திலும்இவரைப்பற்றிஒன்றும்ஓதாதிருத்தல்.

(3) மாணிக்கவாசகர்பாடிய திருப்பதிகளாகிய திருப்பெருந்துறையையும், திருஉத்தரகோசமங்கையையும்பற்றி மூவரில் ஒருவரேனும் பதிகம்பாடாதுவிட்டது.

(4) திருவாலவாயின்கண் சிவபெருமான்செய்தருளிய திருவிளையாடல்பலவும் மாணிக்கவாசகர் அறிந்திருக்க அவைகளுள் ஒன்றையேனும் தேவாரப்பதிகங்களிற் காணாமை.

(5) மாணிக்கவாசகர் சிதம்பரத்தைப் பொன்னம்பலமென்று வழங்குதல்.

(6) திருக்கோவையாரில் வரகுணனைப்பற்றி மாணிக்கவாசகர் பேசுதல்.

இக்காரணங்களின் வன்மைமென்மைகளைச் சற்றுஉற்றுப்பார்ப்போம்.

மாணிக்கவாசகர்பெயர் திருத்தொண்டத்தொகையு ளோதப்படாமையால் அவர் 9-வது நூற்றுண்டிற்றேன்றிய சுந்தரமூர்த்திக்குப் பிற்பட்டவராகற்பால ரென்கிறார்கள். சாதாரணமான எத்துணையோ சிவனடியார்கள்பெயரும் வரலாறு மடங்கிய திருத்தொண்டத்தொகை பாடிய சுந்தரர் இடையறுச்சிவத்தியானமும் சிவபத்தியு முடையராய் விளங்கிக் கேட்டோரைமனமுருக்கி முத்திநெறியிற்செலுத்துமியல்பின தாகிய திருவாசகமுந் திருக்கோவையாரும் பாடிய சீவன்முத்தராகிய மாணிக்கவாசகர்பெயரு மறிந்திலரென்பது பெருந்துணிபேயாகும். அதனுல் மாணிக்கவாசகர் சுந்தரர்காலத்திற்குப் பின்தோன்றியிருக்க வேண்டுமென்பது ஒருதலையென்பர் சிலர். ஆனுல் திருத்தொண்டத் தொகையில் வாதவூரடிகளைப்பற்றிக் கூறுததால் அவர் சுந்தரமூர்த்திக் குப் பின்புதானிருந்திருக்கவேண்டுமென்பது என்னஞாயம்? தமிழ்ப் பெயரகராதியியற்றிய ஸ்ரீமான் இராமநாதன் இவ்விடயத்தைப்பற்றி அவ்வகராதியில் பின்வருமாறு எழுதியிருக்கின்றார். "திருத்தொண் டத்தொகையினுள்ளே யெடுத்தோதப்படாமையின் மாணிக்கவாசகர் சுந்தரமூர்த்திநாயனருக்குப் பிற்பட்டவரெனச் சாதிப்பாருஞ்சிலருளர் அஃ தறியாமையின்பாலதாம். அகஸ்தியர், பதஞ்சலி, வியாக்கிர பாதர்முதலியேரெல்லாஞ் சிவபத்தியிலுஞ் சிவயோகத்திலும் சிறந்த மெய்யடியார்களாகவும் அவரையெல்லாந் திருத்தொண்டத்தொகையி னுட்கூறுமை யாதுகாரணமாமோ, அதுவே மாணிக்கவாசகரைச் சேர்த்தோதாமைக்குங் காரணமாம்," இதுநிற்க; சுந்தரர் திருத் தொண்டத்தொகையில் "பொய்யடிமையில்லாத்புலவர்க்குமடியேன்" என்றுகூறியது மாணிக்கவாசகரை உத்தேசித்தே கூறியதென்பது என் சிற்றறிவிற்குத்தோன்றுகிறது. மாணிக்கவாசகரைப் பொய்யடிமை யில்லாதபுலவரென்றுவருணித்தல் பொருந்தாதென்றுகூற ஒருவருந் துணியார். 9—வது நூற்றுண்டிற்கு வெகுகாலத்திற்குமுன்னரே

மாணிக்கவாசகரைச் சைவசமயத்தார் மகானெனக்கருதிக் கொண்டாடிவந்தனராயின் ஏனைய தொண்டர்களுக்கொப்ப அவரை அவர் திருநாமத்தால் வெளிப்படையிற்கூறுது சிறப்புவசனத்தாற் செவ்வனே குறித்துத் திருத்தொண்டத்தொகையில் சுந்தரமூர்த்தி அவரைப்பாடுதல் பாரம்பரியவழக்கத்திற்கும் பொருத்தமேயாகுமன்றோ! மணிமேகலைப்புட் சிறைசெய்காதையில் சாத்தனர் திருவள்ளுவரைப் .பெயர் கூறுது, "பொய்யில்புலவன்" என்று கூறியிருப்பதும், சாத்தனரைச் சிலப்பதிகாரம் காட்சிக்காதையில் "நன்னூற்புலவன்" என்று சிறப்பித்துக் கூறியிருப்பதும் அனைவருமறிவர். சிவபெருமானே ஞானசாரியராக அருளுடன்தோன்றி உபதேசஞ்செய்து ஆட்கொண்டருளப்பட்டவரும், பாண்டியனு லொறுக்கப்பட்டுநின்றபோது துயர்பொறுக்க மாட்டா தலறிக் கண்ணீர்சொறிந்து திருவாசகமோதித் திருப்பெருந்துறையுறைசிவனைப் போற்ற, எம்மீசன் பெருங்கருணையாளன் உள்ளங் கனிந்து இருபெருந்திருவிளையாடல்கள் செய்தருளிக் காத்தருளப்பட்டவருமான வாதவூரடிகளைப் பொய்யடிமையில்லாதபுலவரென் றேத்துவதில் இழுக்குத்தானென்னை? சுந்தரரு மவர்காலத்தவரும் மாணிக்கவாசகர்மீதுவைத்தபெரும்பத்தியையு மவர் திருவாய்மலர்ந்தருளிய சிறந்த பிரபந்தங்களி னுைப்பில்லாப்பெருமையையுந் துலக்க இதுபோலுரித்தான வேறு சிறப்புவசனமுளதோ ? வேம்பத்தூர்நம்பியாடிய திருவிளையாடற்புராணத்தில், மாணிக்கவாசகரை மெய்யடியானென்றும்,பாடன்மாமுனிவரென்றும் கூறியிருத்தல்இங்குகவனிக்கத்தக்கது. ஏனையோரு மிவரை அருள்வாதவூரரென்றும், முத்தமிழ்வாதவூரரென்றும் மடைமொழிகூட்டிக்கூறியுள்ளார். அதனுல் சுந்தரர் திருத்தொண்டத்தொகையில் மாணிக்கவாசகரைப் பொய்யடிமையில்லாத புலவரென்று ஆன்றோர்சம்பிரதாயந்தழுவி விவரணமொழியா லோதினரென்பது வழுவாகாதென்று தோன்றுகிறது. இக்கூற்றுப் பெரியோர் கொள்கையோடு முரண்படுதல் நான் சற்றும் மறக்கவில்லை. திருத்தொண்டத்திருவந்தாதியில், 'பொய்யடிமையில்லாப்புலவர்' என்பது பொய்மையில்லாத்தமிழ்ச்சங்கத்திற் றிருவாலவாயான்சேவடிக்குக் கவி பலபாடும் கபிலர்முதனுற்பத்தொன்பது புலவோர் எனநம்பியாண்டார் நம்பி பொருள்கூறியிருக்கின்றுர். இவ்வாறு பதங்களைச்சேதித்து மற்றோர்முறையிற்கோர்த்துப் பொருள்கூற ஏற்பட்ட ஆவசியகமென்னை?

கடைச்சங்கப்புலவர் நாற்பத்தொன்பதின்மரும் சைவராவரோ? அவர்களில் ஜயினரும், பௌத்தரு மிலரோ? அன்றியு மடியார்கள்தனிப் பெயர்கூறிவருமிடையில் சங்கப்புலவர்களை ஒருங்கே கூட்டமாக ஓத நேர்ந்த ஆவசியகமென்னை! 10-வது செய்யுளில் "பத்தராய்ப்பணிவார்களெல்லார்க்குமடியேன் பரமனையேபாடுவாரெல்லார்க்குமடியேன்" என்றதில் சங்கப்புலவருட் சிவனடியாராயுள்ளவர்களும் அப்பொதுவசனங்களிலடங்காரென்பது எதுபற்றியோதெரியவில்லை. செய்யுளமைப்புக்காக இவ்வாறு ஒரேபொருள்பட இருமுறை சுந்தரர்கூறினாரென்றால், சுந்தரமூர்த்திநாயனாருக்குக் கூறியதுகூறல் அல்லதுமிகைபடக்கூறல் என்றகுற்றமும் ஏற்படுத்தவேண்டும். நம்பியாண்டார்நம்பிகூறிய வியாக்யானம் முற்றிலுமாக்ஷேபமின்றி ஒப்பக்கூடியதன்றென்பது திராவிடப் பிரகாசிகையார்வரைந்துள்ள கீழ்வரும்விசேடவுரையால் விளங்கும் "கடைச்சங்கப்புலவர் தமிழ்நாட்டுமூவேந்தரையும் பாடினாராக, அவர் தம்மை நம்பியாரூரனார் "பொய்யடிமையில்லாதபுலவர்" என்று போற்றுதல்பொருந்தாதாலெனின்? அம்மூவேந்தர்முதலாயினார்மையணியுங் கண்டத்திறையனார்மலரடிப்பத்திவழிபாடுதலைநின்று செங்கோன்மையும் வரையாவீகையும் விண்ணும்மண்ணும்போற்ற நண்ணியபெரியராதல்பற்றிக்கடைச்சங்கப்புலவர் அவரையும்பாடினார். அப்பாட்டெல்லாம் அறம்பொருளின்பம் வீடெனுமுறுதிப்பொருணான்கின்றிறனும்விளக்கித்தமிழுலகிற்குறுதியேபயவாநிற்கும். ஆதலினவர் தம்மை நம்பியாரூரர் முதலியோர்போற்றியது பொருத்தமுடைத்தேயாமென்க" என்றார் சபாபதிநாவலர். அவர்நம்பியாண்டார்நம்பியின் கூற்றைத்தாபிக்க இவ்வதிசயயுக்திகூறினர்போலும்! நம்பியாண்டார் நம்பியுரைத்தபொருள் தவறென்பது திருத்தொண்டர் திருவந்தாதியின் 87-வது செய்யுளால்விளங்கும். அச்செய்யுளில் கூட்டமொன்பானோடறுபத்துமூன்றுதனிப்பெயரடங்கிய 11-பாக்களில் 72 அடியார்களைச் சுந்தரர்பாடினாரென்று கூறப்பட்டுள்ளது. பெயர்கூறிவிளக்கிய தனியடியார்களின்தொகுதி திருத்தொண்டத்தொகையில் 62 ஆகும். அதனோடும் பொய்யடிமையில்லாப்புலவர்என்பது கூட்டத்தைக்குறிக்குமொழியன்றென்பது காணக்கிடக்கின்றது. அது தனிப் பெயராயின் மாணிக்கவாசகரை யம்மொழிகுறிப்பதே மிகவுமுசிதமாகும். கோபாலகிருஷ்ண பாரதி நந்தனார் சரித்திரகீர்த்தனையின் பாயிரத்தில் அறுபத்துமூன்று நாயன்மார் துதிபாடுமிடத்து "வாதவூரடியாரோடுமற்றறுபத்துமூவர்

பாதமேவணங்கி" என்றுபாடியிருப்பதுங் கவனிக்கத்தக்கது. திருத்தொண்டத்தொகையில் மாணிக்கவாசகரைச்சுந்தரர் எடுத்தோதவில்லையென்றாயினுமாகுக. ஆனால் தேவாரத்திலெவ்விடத்தும் மாணிக்கவாசகரைச்சுட்டி ஓதி யிருப்பதில்லை என்பது ஒருசிறிதும்பொருந்துமோ? அப்பர் பாடிய திருவாரூர்ப்பதிகத்தில் "நரியைக்குதிரைசெய்வானு" மென்றோதியது சிவபெருமான் மாணிக்கவாசகர்பொருட் டருளிச்செய்த வொரு திருவிளையாடலை நினைந்தோதியதென்ற நம் தமிழ்க்கலைஞர்களின்கொள்கையும் தவறா? அரிமர்த்தனபாண்டியனுக்காக வாதவூரர் குதிரைவாங்கச் சென்றவிடத்துச் சிவபெருமானாலாட்கொள்ளப் பட்டுக் குதிரைவாங்குவதற்காகக் கொண்டுசென்ற திரவியமுழுதும் சிவாலயத்திருப்பணிக் காக்கியதறிந்த பாண்டியனவரைச்சிறையிலிட்டுக் கடுந்துயரிலாழ்த்த

கலந்துநின்னடியாரோடன்றுவாளாக்களித்திருந்தேன்
புலர்ந்துபோனகாலங்கள்புகுந்துநின்றதிடர்பின்னாள்
உலர்ந்துபோனேனுடையானேஉலவாஇன்பச்சுடர்காண்பா
னலந்துபோனேனருள்செய்யாயார்வங்கூரவடியேற்கே.

என்பதுபோன்ற பலவாசகங்கள்பாடிச் சிவபெருமானைவேண்ட, சிவபிரான் நரிகளைப்பரிகளாக்கிக்கொண்டு பாண்டியன்பாற்கொடுத்தவழி, வாதவூரடிகள் காத்தருளப்பெற்றாரென்ற வோரைதிகம்தமிழகத்தில் தொன்றுதொட்டுவழங்கிவருவது யாவருமறிவர். திருவிளையாடற் புராணங்களுள் முன்னதாகிய வேம்பத்தூர் நம்பியியற்றிய திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணத்தில் மாணிக்கவாசகர் துயர்தீர்ப்பானாய்

மன்னியவுலகுதன்னில்வித்தின்றிநாறுசெய்வோன்
நன்னெறியில்லாப்பொல்லாநரகரைத்தேவுசெய்வோன்
மன்னியநரிகள்தம்மைமறுகெலாம்வாவியேறித்
தென்னன்முன்குதிரையாகச்செய்புதோன்றுமல்விட்டான்

என்ற பாடலுளது. வேம்பத்தூர் நம்பி இற்றைக்கு 9-நூற்றாண்டிற்கு முன்னிருந்தவரென்பது மகாமகோபாத்தியாயர் ப்ரஹ்மஸ்ரீ ஸ்வாமிநாதய்யரவர்கள் அந்நூலிற்கு வரைந்துள்ள மிகவுமருமையான முகவுரையால் விளங்கும். அக்காலந்தொட்டேனும் நரியைப் பரியாக்கிய திருவிளையாடல் மாணிக்கவாசகர் பாலருளிச்செய்யப்பட்டதென்றே தமிழரின் துணிபு. முற்கூறிய வேம்பத்தூரார்செய்யுளும் அப்பர்

தேவாரப்பதிகத்தை யொட்டியே எழுதப்பட்டதென்பது தடக்கையி னெல்லிக்கனியென விளங்கும். ஆகவே 'நரியைக்குதிரைசெய்வானு' மென்று அப்பர் பாடியது மாணிக்கவாசகருக்காகச் சிவபிரானருளி நிகழ்வித்த திருவிளையாடலைக்குறித்தேயா மென்பது தொன்றுதொட்டு மிக்கோர்கொள்கை. புலவர் பெருமானாகிய ஸ்ரீ ஸ்வாமிநாதய் யரவர்களும் அவ்வாறே கூறுகின்றார்கள். இக்கொள்கை தவறெனச் சாதிப்பார் தைரியம் வியக்கத்தக்கதே! அது தவறென்பதற்கு இரண்டு ஆதாரங்கள் கூறுவர்.

1. திருவாசகத்தில் இத்திருவிளையாடல் மாணிக்கவாசகர்பொருட் டுச் செய்யப்பட்டதென்று சொல்லப்படவில்லையாம். இதைப்பற்றி இங்கு விரிவாய் விசாரிக்க அவசியமில்லையென்று நினைக்கிறேன். மாணிக்கவாசகர் இத்திருவிளையாடலைப்பன்முறை யெடுத்தெடுத்து திருவாசகத்திலோதுதலால், அதற்குமவர்க்கும் விசேஷ சம்பந்தமிருத் தல்வேண்டுமென்பது ஊகிக்கக்கிடக்கின்றது. ஆனந்தமாலையில்

"நரியைக்குதிரைப்பரியாக்கிஞாலமெல்லாநிகழ்வித்துப்
பெரியதென்னன்மதுரையெல்லாம்பிச்சதேற்றும்பெருந்துறையாய்,"

என்றும், அன்னைப்பத்தில் "பாய்பரிமேற்கொண்டென்னுள்ளங்கவர் வரால்" என்றும் திருப்பொன்னூசலில், சிவபெருமான் "ஞாலமிகப் பரிமேற்கொண்டுநமையாண்டான்" என்றும் கீர்த்தித் திருவகவலில் "நரியைக்குதிரையாக்கியநன்மையும்

"ஆண்டுகொண்டருளஅழகுறுதிருவடி
பாண்டியன்றனக்குப்பரிமாவிற்
றீண்டுகனகம்இசையப்பெறாஅ
தாண்டானென்கோ!"

என்றும் மாணிக்கவாசகர்பாடியிருப்பது ஈண்டுக் கவனிக்கத்தக்கது.

2. 'நரியைக்குதிரைசெய்வான்' என்றது மாணிக்கவாசகர் பொருட்டு நிகழ்ந்த திருவிளையாடலொன்றைக் குறிக்குமாயின் ஏனைய பதங்கள் எவ்வெவ்த்திருவிளையாடல்களைக் குறிக்கின்றனவென்று வினவு வர். இவ்வாக்ஷேபமும் எளிதில் நீக்கக்கூடியதே. அப்பர் பதிகம் யாவருமறிந்ததேயாயினும் அதையிங்கெடுத்தோதல் சௌகரியமாகும். அப்பதிகமாவது:

"நரியைக்குதிரைசெய்வானுநரகரைத்தேவுசெய்வானும்
விரதங்கொண்டாடவல்லானும்விச்சின்றிநாறுசெய்வானு
முரசதிர்ந்தானைமுன்னோடமுன்பணிந்தன்பர்களே த்த
அரவரைச்சாத்திநின்முனுமாரூரமர்ந்தவம்மானே."

இச்செய்யுளில் "நரியைக்குதிரைசெய்வான்" என்றது நிகழ்ந்த ஒரு லீலையைக் குறிக்குமெனக்கொண்டால் ஏனைய விவரணமொழிகளொவ்வொன்றும் சிவபெருமானருளிய வெவ்வேறு திருவிளையாடல்களைக் குறித்தோதியதாகவேயிருக்கவேண்டும் என்னும் ஞாயந்துலங்கவில்லை. அம்மொழிகளவ்வாறு கொள்ளப்பெறவேண்டியது ஒருதலையாயின்,ஒவ்வொன்றிற்குமுரித்தான சிவலீலையும் எளிதிற் கூறற்பாலது. நரகரைத் தேவுசெய்வானென்றும், விரதங்கொண்டாடவல்லானென்றும், விச்சின்றிநாறுசெய்வானென்றும் இப்பதிகம் விவரித்துக் கூறுகின்றது. நரகரைத்தேவு செய்வானென்றதிலடங்கிய லீலை, பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடற்புராணத்தில் 26-வது லீலையாகக் கூறப்பட்டுள்ளது. அக்கதையை ஈண்டு விரித்தெழுத அவகாசமில்லை. அத்திருவிளையாடற்கேதுவாகிய பெருங்கொடியோனை உமையவள்கண்டுழி அவன் செய்தபாவத்துக்களவில்காலம்"வெய்யநாலேழுகோடிநர்கிடைவிழுந்தானேனுமுய்வகையிலாதபாவி" என்றும், "நின்னுமஞ்சொன்னோர்வருக்கமு நரகில்வீழக்கருதிநீசெய்தபாவ'' மென்றும் திருவாய் மலர்ந்துகூறினரென்றால் அவன் செய்த பாவத்தின் கொடூரமுரைக்கற்பாலதோ? இக்கொடும்பாவியும் ஈசன்றிருவருளால் "பாதகங்கழிந்துதெய்வப்பார்ப்பனவடிவமானான்" என்றும்

"தற்பரவறிவானந்தத்தனியுருவுடையசோதி
பொற்பதமருங்கிற்புக்கான்புண்ணியமறையோனம்மா."

என்றும் பரஞ்சோதி முனிவர் வரைந்துளாராகையால் நரகரைத்தேவு செய்வானென்றது இத்திருவிளையாடலுக்குப்பொருந்துவது காண்க. இனி விரதங்கொண்டாடவல்லானென்றது, பிஞ்ஞகன்கூத்தைக்குறிப்பதுடன், சிவபெருமான் தேவியோடு வாதுகூறி நடனஞ்செய்த திருவிளையாடலையுங் குறிக்கும். இப்பால் விச்சின்றி நாறுசெய்வானென்றது, மாலயற்கரியோன்தன்மெய்த்தொண்டனாகிய திருநாளைப்போவான்தில்லைசென்று தரிசிக்கப்பேரவாக்கொண்டது நிறைவேறற்பொருட்டு, அவ்வடியானூழியஞ்செய்துவந்த அந்தணன் நிலத்தில் வித்திடாமலே ஏகராத்திரியிற் செந்நெற்குலைசெழிக்கப் பயிர் விளைவித்த

லீலையைக்குறிக்கும். ஆகவே இவ்விரண்டாக்ஷேபங்களும் நீக்கற்பால னவேயாம். இதுநிற்க, அப்பர் தேவாரத்தில் வேறு சிலவிடங்களி லும் மாணிக்கவாசகரைப்பற்றி ஓதியிருப்பதாகத் துணிவாய்க்கூறலாம் சிவபெருமான் பிட்டுக்கு மண்சுமந்ததும் மாணிக்கவாசகர்பொருட்டே யாமென்பர் தமிழகத்தோர். "பிட்டுநேர்பட மண்சுமந்தபெருந்துறைப் பெரும்பித்தனே" என்று திருவாசகத்துளோதியிருப்பது இங்கு கவ னிக்கத்தக்கது. இத்திருவிளையாடலை அப்பர் "வையைத்திருச்கோட் டில் நின்றதோர் திறமுந்தோன்றும்" என்று தேவாரத்திற் பாடியுள் ளார். மேலும் திருவிசயமங்கைத்திருப்பதிகத்திலும் அப்பர் "வசை யின் மங்கலவாசகர் வாழ்த்தவே" என்று பாடியது மாணிக்கவாசகரைக் குறித்தன்றேவென்று கல்வியின்மிக்கோர் ஆராயத்தக்கது. அஃதெவ் வாறுயினுமாகுக. அப்பர் தனித்திருத்தாண்டகத்துள் "குடமுழுநந் தீசனை வாசகனுக்கொண்டார்" என்றுபாடியிருத்தல் யாவருமறிவர். ஆங்கு "வாசகன்" என்றுகூறியது மாணிக்கவாசகராமென்று ஐயமறக் கூறலாம். அதுவே மஹாமஹோபாத்யாய ப்ரஹ்மஸ்ரீ ஸ்வாமிநாதய் யரவர்களின் கொள்கை. மாணிக்கவாசகர் நந்தியினவதாரமென்று வட்டமொழி வல்லுநருமுரைப்பர். அதனால் மூவர் தேவாரத்தினுள் ளும் மாணிக்கவாசகரைப்பற்றி யொன்றுமோதப்படவில்லையென்றல் முற்றுந்தவறேயாமென்று நினைக்கிறேன்.

3. மாணிக்கவாசகர் நாயனர் மூவர்க்குப் பிறபட்டவரென்று தாபிக்கக்கூறும் வேறொரு காரணம், திருப்பெருந்துறையையும் திரு உத்தரகோசமங்கையையும்பற்றி நாயன்மார் பதிகம் பாடாமல்விட் டதாம். மாணிக்கவாசகர் முற்பட்டவராயிருந்தால் இவ்விரண்டு திருப் பதிகளையும் தேவாரம் பாடிய மூவரும் மறக்கமுடியாதென்றும் அவர் கள் இச்சிவஸ்தலங்களைப் போற்றிப் பதிகங்கள் பாடாததால் அவர் காலத்திலித்தலங்கள் சிவஸ்தலங்களாய்ப் பெயர் பெற்றிலவென்றுங் கூறுவர். இந்நியாயத்தைக் கைக்கொண்டால் திருவாலவாய்ம் திரு இராமேச்சுரமுஞ் சுந்தரர் காலத்திற்குப் பிறகே சிவஸ்தலங்களாகப் பெயர் பெற்றனவென்றே கூறவேண்டும். ஏனெனில் அத்திருப்பதி கள் சுந்தரமூர்த்திநாயனாரால் பதிகம் பாடிப்போற்றும் பாக்கியம் பெற் றில. அதே நியாயம்பற்றியே அவ்விரண்டு க்ஷேத்திரங்களையும்பற்றிப் பதிகம் பாடிய ஞானசம்பந்தரும் அப்பரும் சுந்தருக்குப் பிறபட்டவரே

யாகவேண்டும்! இது நிற்க, பெருந்துறையும் உத்தரகோசமங்கையும் தேவாரத்துட் பாடப்படவில்லையென்று கூறுவது நேரோ? அவ்விரண்டு க்ஷேத்திரங்களும் அப்பர் காலத்திலேயே புகழ்பெற்ற சைவத் திருப்பதிகளாய்க் கருதப்பட்டனவென்று நிச்சயமாய்க் கூறலாம். இத் தலங்களிரண்டும் பதிகம்பெற்ற சிவஸ்தலங்களல்லவென்பது மெய்யே. ஆனால் அப்பர் தமது திருத்தாண்டகத்தில் க்ஷேத்திரக்கோவையிலும் திருஅடைவிலும் பெருந்துறையைப் பெயர்கூறிப் போற்றியுள்ளார். மேலும் இச்சிவஸ்தலத்திற்கு ஆதிகைலாசம் என்ற திருநாமமுண்டென்பது பண்டித சிரோமணியாகிய உ. வே சாமிநாதய்யர் திருப்பெருந்துறைப்புராணத்திற்கு எழுதிய அருமையான முகவுரையால் விளங்குகின்றது. திருநெய்த்தானத்திருத்தாண்டகத்தில் "ஆதிக்கயிலாயனீயேயென்றும்" என்றப்பர் பாடியது திருவார் பெருந்துறைச் செல்வனைப்பொற்றியதாக அம்முகவுரையாலறியக்கிடக்கின்றது. திருப்பெருந்துறையை ஆதிக்கயிலாயமென்று அப்பர் விதந்து கூறினராயின், அவர் காலத்தில் இத்தலம் சிவஸ்தலங்களுள் மிகப்பெயரும் பழமையும் பெற்றோங்கியதென்று ஐயமறக்கூறலாம். அன்றியும் ஞானசம்பந்தர் பதிகம் பாடியுள்ள சிவஸ்தலங்களில் திருப்பேணுபெருந்துறையொன்று. "பேணு" என்ற அடைமொழிகூட்டி இவ்வூருக்குப் பெயர் கூறியது. திருப்பெருந்துறையினின்று அதை வேறுபடுத்தற்கன்றோ? அவ்வாறாயின் திருப்பெருந்துறையக்காலத்தே சீர்த்தி பெற்றவோர் திருப்பதியாகக் கருதப்படவேண்டும். பேணு பெருந்துறை என்றபதம் திருவாசகத்தேயுள்ளது. "பெண்ணாளும்பாகனைப் பேணுபெருந்துறையில்" என்ற மாணிக்கவாசகர் வாக்கியத்தோடு "பெண்ணாணயவார்சடையண்ணல்பேணுபெருந்துறையாரே" என்ற ஞானசம்பந்தர் வாக்கு இங்கு சேர்த்தாலோசிக்கற்பாலது. தேவார வைப்புத்தலங்களுள் பெருந்துறை கூறப்படினும், அது திருப்பதிகம் பாடப்பெறாதது நாயன்மார் மூவருமதைச்சென்று தெரிசிக்காத காரணம்பற்றியேயாகும். அன்றியும் நாயன்மார் பாடியது 10,300 பதிகங்களென்றும் அவற்றுளிப்பொழுது 796-பதிகங்கள் மாத்திரமே எஞ்சிநிற்பனவென்றும் பெரியோர் கூறுவர். மேலும் பெருந்துறை யென்ற க்ஷேத்திரம் ஆளுடையார்கோவில்தானோவென்றும் சந்தேகந்தோன்ற விடமுளது. அது ஓர் துறைமுகமாயிருத்தல்வேண்டும். தாவுமா

விறங்குபட்டின" மென்றும் "வேலையந்துறை" யென்றும் "நெடும்பு விசார்தருமாழ்கடலின்கரை" யென்றும் அவ்வூர் வர்ணிக்கப் பெற் றுளது. அது குடதிசையின்கண் ணுள்ளதென்றும், மிடைந்த பதியுங் கடமும் வெற்புங்கடந்து அவ்வூர் சேர மாணிக்கவாசகர் சென்றன ரென்றும், அது தெங்குதிரள் சோலைகளாற் சூழப்பட்டதென்றும், பலவும் பைங்கமுகும்செழித்துவளருமிடமென்றுங் கூறப்பட்டுளது. குருந்தமரமும் மலைநாட்டுமரமாகக் காணப்படுகிறது. அதனால் பெருந் துறை மலைநாடாகிய மலையாளநாட்டிலிருக்கவேண்டுமென்று நினைக் கிறேன். மலையாளத்திலிப்பொழுதும் வழங்கிவரும், அச்சனன், எந் துவே, நின்னலே, என்பன முதலிய சொற்கள் திருவாசகத்தில் பிர யோகிக்கப்பட்டிருப்பதும் கவனிக்கத்தக்கது. மலையாளவிராச்சியத்துப் பிரதான சிவஸ்தலமாகிய வைக்கத்திற்கு வாதபுரீசுவரம் என்றபெயர் வழங்குகிறதாம். அவ்வூர் க்ஷேத்திரத்து மூர்த்தியின் திருநாமம் பெருந்துறைகோவிலப்பனென்றாகும். அங்கு வெகு பக்தியுடன் நடத் திவரும் அட்டமித்திருவிழாவும், சிவபெருமா னத்தினம் பக்தனொருவ னுக்கு ஞானசாரியனாய்த்தோன்றி யுபதேசஞ்செய்துய்வித்த பெரு மையை விளக்குமென்பர். இச்சிவஸ்தலமிருப்பது அரபிக்கடலைச் சார்ந்து கிடக்கும் வேம்பனாடு என்று பெயர் வழங்கிவரும் ஒரு பெரிய ஏரிக்கரையிலானதால் அந்த பிரதேசம் முற்காலத்தில் பாண்டிநாட் டைச் சேர்ந்திருந்ததென்பது தெள்ளிதிற் பெறலாம். கி. பி. 80-வது வருஷத்திய பெரிப்ளஸ் என்ற நூலால் அவ்விடம் அக்காலத்தில் பாண்டிய ஆட்சிக்குட்பட்டிருந்ததாகவும் அவ்வேரிக்கரையில் பெரிய தோர் துறைமுகம் விளங்கிவந்ததென்றும் புலப்படுகிறது. ஆகவே "தென்னன்பெருந்துறை' என்று மாணிக்கவாசகர் பன்முறை கூறு வது இத்தலத்திற்குப் பொருத்தமேயாகும். ஸ்ரீமாந்-சாமிநாதய்யர வர்கள் ஆளுடையார்கோவில் மிழலைக்கூற்றத்திலுள்ளதென்றும், மிழ லைக்கூற்றம்நெய்தனிலத்தைச்சார்ந்ததே யென்பது புறநானூறு 24-ம் செய்யுளால் வெள்ளிடைமலைபோல் விளங்குகிறதென்றும், அதனால் இவ்வூர் கடற்கரையிலுள்ள ஊரன்று என்பதுபோன்ற வாதம் தவ றென்றும், திருப்பெருந்துறைப் புராணத்தின் முகவுரையில் எழுதி யிருக்கின்றார். திருப்பெருந்துறைப்புராணம் பாடிய ஸ்ரீமீனாக்ஷிசுந் தரம்பிள்ளையவர்கள், பாண்டியன் வாதவூரரைக் குதிரைகள் வாங்கிவர வனுப்பினதாகக் கூறுமிடத்து

"உவர்படுகுணகடற்பாலுறுதுறையனைத்தும்வந்த
வவரவர்தேயத்துள்ளவபெரியனைத்துமென்றார்" என்றும்

"கன்றல்செய்காடுநாடுங்கடந்துகீழ்கடற்கரைக்கட்
சென்றுவாம்பரிகளெல்லாங்கொள்ளுதிர்சிறப்பவென்றான்"

என்றும்பாடியுள்ளார். வாதவூரடிகள் உபதேசம்பெற்றஸ்தலம் 'திரை யெறிநெய்தல்' சார்ந்தவிடமேயாம். அது பாண்டிநாட்டிலிருந்திருக்க வேண்டும். ஆனால், பாண்டிநாட்டுக் "குணகடற்பாலுறுதுறை"கள் அக்காலத்தில் 'தாவுமாவிறங்குபட்டினங்க' ளாகக்காணப்படவில்லை. முற்காலத்தில் அரபியாமுதலிய குடதிசைநாடுகளிலிருந்தே குதிரைகள் பாண்டிநாட்டு மேற்கடற்கரையில்வந்திறங்கினவென்று நினைத்தற்கு இடமுள்ளது.

"யவனர்தந்தவினைமாணன்கலம்
பொன்னொடுவந்துகறியொடுபெயரும்
வளங்கெழுமுசிறி"

எனவும் பிறவாறும் தொன்னூல்களிற் கூறப்பட்டிருத்தலால் மேல்கரையில் யவனவியாபாரிகளின்கப்பல்கள் மிகுதியாகவந்தனவென்று எளிதிற்கொள்ளலாம். ஈண்டுக்கூறும்யவனர் பெரும்பாலும் சோனகர் என்னும் யவனராவர். சோனகம் இந்தியாவுக்குமேல்பாலுள்ளநாடுகளி லொன்றாகையால், அது அரபியாவென்றுகருதப்படுகிறது. தமிழ் மக்கள் சோனகரை யவனரென்றுவழங்கிவந்தனரென்பது "சோனகர் யவனர்" என்றதிவாகரத்தாலும், பத்துப்பாட்டில் யவனரென்றபதம் வருமிடமெல்லாம் நச்சினார்க்கினியர் சோனகர்என்று உரைகூறிப் போதலாலும்விளங்கும். கீழைக்கரையில் குதிரைகள் பண்டைக்காலத்தில் இறக்குமதியாகவில்லையென்று நான்கூறவில்லை. சோழன்இராசதானியாகிய காவிரிப்பூம்பட்டினத்தில் இறக்குமதியாகும்பண்டங்கள் கூறுமிடத்து 'நீரின்வந்தநிமிர்பரிப்புரவியும்' என்று பட்டினப்பாலையில் கூறியிருப்பதால், அத்துறைமுகத்தில் கரிகாலன்காலத்தே கடல்வழியாக நாவாயில் குதிரைவந்திறங்கினவென்பது தெற்றெனவிளங்குகின்றது. ஆனால் மாணிக்கவாசகர் பாண்டிநாட்டுக் கடற்கரைத்துறைக்குப் போனாரேயன்றி சோழநாட்டிற்குச்சென்றதாக நினைக்கஹேதுவில்லை.

"குதிரையைக்கொண்டுகுடநாடதன்மிசைச்
சதுர்படச்சாத்தாய்த்தானெழுந்தருளியும்" என்ற திருவாசகமும் ஈண்டாலோசிக்கத்தக்கது.

நிற்க; உத்தரகோசமங்கை வெளிப்படையாய்த் தேவாரத்திலெங்கும் கூறப்படவில்லை. ஆனால் "அதியரையமங்கையமர்ந்தான்றன்னை" யென்று அப்பர்கூறியது உத்தரகோசமங்கையில் சிவபெருமான் வலைவீசி, யரையன்மகளாய்வளர்ந்தபார்வதியை விரும்பிமணந்த திருவிளையாடலைச்சுட்டுமன்றோ! இதுவே பண்டிதசிகாமணியாகிய மகாமகோபாத்யாய ஸ்வாமிநாதய்யரவர்களின்கருத்தாம். உத்தரகோசமங்கையில் இப்பொழுதும்நடைபெறும் ஒரு திருவிழாவும் இத்திருவிளையாடலை விளக்கும்.

IV. இனி நாயன்மார்மூவரும் திருவாலவாயில்நிகழ்ந்த திருவிளையாடல்களை அறியாதாராயிருக்க, மாணிக்கவாசகர் அத்திருவிளையாடல்கள்பலவுமறிந்தனராதல்பற்றி, அவர் திருவிளையாடற்புராணத்திற்கு பிற்பட்டவராதல்வேண்டுமென்று சிலர்கூறுகின்றனர். மாணிக்கவாசகரைப்பற்றிக்கூறுந்திருவிளையாடற்புராணத்திற்குப்பின் அவர் தோன்றினரென்பது என்னபுதுமை! தேவாரம்பாடியநாயன்மார்கள் மதுரைத்திருவிளையாடல்களையறியாரென்னலொருசிறிதும் பொருந்துமோ? அப்பர் தேவாரத்துள்

(1) நன்பாட்டுப்புலவனாய்ச்சங்கமேறி நற்கனகக்கிழிதருமிக்கருளினோன் காண்
(2) வளைவிலியாயெல்லோர்க்குமருள்செய்தானை
(3) அதியரையமங்கையமர்ந்தான்றன்னை
(4) பாலவிருத்தருமானார்தாமே
(5) பாலவிருத்தனுமானான்கண்டாய்
(6) விருத்தனாய்ப்பாலனாகி
(7) பாலனாய்விருத்தனாகி

என்பனமுதலியவாசகங்களும், ஞானசம்பந்தர் தேவாரத்துள் "பட்டிமன்றேன்னன்" ஆலவாயரன்கையதுவீணையே" என்பனபோன்ற வாசகங்களும் திருவாலவாயான்திருவிளையாடல்களைக்குறிப்பது தெள்ளிதிற் காணலாம். அதனால் இக்கூற்றுந்தவறேயாம்.

நாமாராய்ந்துமுடித்தவிக்காரணங்களே மாணிக்கவாசகர் நாயன்மார்மூவர்க்கும் பிற்பட்டவரென்றுசாதிப்பதற்கு பிறரெடுத்துக்கூறும் ஞாயங்கள். அப்பால் திருவாசகத்துள்ளே "கண்ணப்பர் சண்டீசர்களைத் துதிப்பவர் திருஞானசம்பந்தர்முதலியோரைத்துதிக்காமையாலும் 'சிரிப்பார்களிப்பார்தேனிப்பார்' என்னுந்திருவாசகத்திலே தேனித்-

என்னுஞ்சொல்வழக்கும், உவலைமுதலிய அரியசொற்களும் பிற்காலத்து வழக்கன்மையாலும், திருவாசகம் தேவாரத்துக்குமுந்தியதென்பது நன்ருகத்துணியப்படும்" என்று ஸ்ரீமான் இராமநாதன்கூறியதுங் கவனிக்கத்தக்கது. அதுவுமன்றி தேவாரப்பதிகங்கள் பெரும்பான்மையும் விருத்தமுறையில் எழுதப்பட்டனவாக, திருவாசகத்தின் செய்யுளிலக்கணம் சங்கநூல்களின் பாவிலக்கணத்தை மிகுதியுமொத்திருத்தல் பற்றி, ஸ்வாமிவேதாசலம் திருவாசகம் தேவாரத்துக்குமுந்தியதென்றுவரைந்துள்ளார். இதுவே தமிழ்க்கலைஞரின்பெரும்பான்மையோர் கருத்து. பச்சிமநாட்டுத் திராவிடவித்வான்கள்கொள்கையு மிதுவேயாகும்.

பின்னுல் ஆராய்ச்சிசெய்வான் எஞ்சியவிஷயமிரண்டே. அவற்றுளொன்று: மாணிக்கவாசகர் சிதம்பரத்தைப் பொன்னம்பலமென வழங்கலால் அவர்காலம் பராந்தகன்காலமாகிய 10-ஆம் நூற்ருண்டிற்குப் பிற்பட்டதாகவேண்டுமென்பது. மற்ருென்று: அவர் வரகுணனைப்பற்றிக்கூறியிருப்பதால், வரகுணன்காலமாகிய 9-வது நூற்ருண்டின்பிற்பகுதிக்குப்பிற்பட்டே மாணிக்கவாசகர் தோன்றியிருக்க வேண்டுமென்பது.

சிதம்பரத்தைப் பொன்னம்பலமென்றுகூறுவோர்யாவரும் பராந்தகன்காலமாகிய 10-வது நூற்ருண்டினுதிவருடங்கட்குப்பிற்பட்டவர்தாமோ? அப்பர் பல பதிகங்களில் சிதம்பரத்தைப்பொன்னம்பலமென்றே பாடியிருக்கின்ருர். அவ்வாறுபாடியிருத்தலோடுஒரிடத்து

"தூயசெம்பொன்னினுலெழுதிமேய்ந்த
சிற்றம்பலக்கூத்தனை"

என்றும்பாடியுள்ளார். ஆயினும் அப்பர்காலம் 7-வதுநூற்ருண்டு. அதாவது சிதம்பரத்துத்திருக்கோயிலைப் பொன்னேடிட்டுமூடிய பராந்தகன்காலத்திற்கும் மூன்றுநூற்ருண்டுக்குமுன்னர் என்பதுயாவருமொப்பும்விஷயம். அவ்விதமிருக்க சிதம்பரத்தைப் பொன்னம்பலமென்றுபோற்றிய மாணிக்கவாசகர் பராந்தகன்காலத்திற்குப்பின்னரே தோன்றியிருக்கவேண்டுமென்றுதுணிவது எஞ்ஞாயம்பற்றி? பொன்னம்பலம் - என்ருல் பொன்னுலமைந்தகோயில் என்றுதான் பொருட்படவேண்டுமோ? மதுரையை 'அம்பொனுல்வாய்' என்றுதேவாரத்தும் 'ஆடகமதுரை' என்றுதிருவாசகத்தும்கூறியுள்ளது ஈண்டாலோசிக்கத்தக்கது.

"கச்சித்திருவேகம்பன்செம்பொற்கோயிற்பாடி" என்றதிருவாசகத்தில் செம்பொற்கோயிலென்றதற்கு செம்பொன்னாற்செய்யப்பட்ட கோயிலென்றோபொருள்? சிதம்பரத்திற்குப் பொன்னம்பலமென்று பெயர்வாய்ந்தது திருக்கோயிலின் ஒப்பற்றவுயர்வும் மகிமையும்பற்றியன்றி பொற்றகடிடப்பெற்றகாரணம்பற்றியாமெனின், பராந்தகன் காலத்திற்குமுன்னரே ஹிரணியவன்மனால் அத்திருப்பதி பொன்கூரையடைந்து பொன்னம்பலமாகவேவிளங்கியதென்று திருக்கோயிற்புராணத்தில் உமாபதிசிவாசாரியார் கூறியிருப்பதுங்கவனிக்கத்தக்கது; அன்றியும் பத்தாவதுநூற்றாண்டினராகிய நம்பியாண்டார்நம்பிகாலத்திலேயே மாணிக்கவாசகர் பெரியதோர்சைவசமயாசாரியராகக்கருதப்பட்டாரென்று முன்னரேகூறியுள்ளேன். ஆகையால் மாணிக்கவாசகர் அந்நூற்றாண்டிலேயே தோன்றினவரெனக்கொண்டால், அவர் பராந்தகனுக்கு அதிககாலம்பிற்பட்டவராதலரிது. அப்படியானால் சிதம்பரத்திற்குப் பொன்னம்பலம் எதார்த்தநாமமாகும்வண்ணம் திருச்சிற்றம்பலத்தைப் பொன்னோடுவேய்ந்து அழியாப்பெயரும்புகழுமடைந்த பராந்தகனை, அக்கோயிற்றிருமுற்றத்தினின்றுபாடிய கோயில்மூத்த திருப்பதிகத்திலும் மாணிக்கவாசகர் முற்றும்மறந்தாரென்றுகூறவேண்டும். இது சம்பவிக்கத்தக்கதோவென்று ஆலோசிக்கவேண்டும். மாணிக்கவாசகர் பராந்தகனுக்குப்பின்றோன்றினாரென்றுகூற ஒருநாயமுமில்லை. பின்னர் வரகுணன்விஷயமெவ்வாறு? "வரகுணனாந்தென்னவனேத்துஞ்சிற்றம்பலம்" என்று திருக்கோவையாரில் கூறியிருத்தல் மெய்யே. சுந்தரபாண்டியனென்றதை அழகுபொருந்தியபாண்டியனென்று பொருள்கொள்ளுதல்போல, ஈண்டு 'வரகுணன்' என்றதை சிலாக்கியமானகுணம்பொருந்தியவனென்று பொருள்கொள்ளுதல் தவறாமோ? பேராசிரியர்உரையில் வரகுணபாண்டியனை இதுகுறிப்பதாக எழுதியிருத்தலால், மாணிக்கவாசகர் ஒருவரகுணபாண்டியனைப்பாடியதாகவேவைத்துக்கொள்வோம். தென்னிந்திய சிலாசாஸனங்களால், 8-ம் நூற்றாண்டின்பிற்பகுதியில் ஒருவரகுணனும், 9-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஒருவரகுணனும், இங்ஙனம் இரண்டுவரகுணபாண்டியர்கள் இதுகாறும் காணப்பட்டனராக அறிகிறோம். அவ்வாறாயின் சாஸனங்களால் வெளிப்படாத வேறு வரகுணபாண்டியர்களும் முன்னிருந்தனரென்று யூகிப்பதிலிழுக்கென்னை? மாணிக்கவாசகர்கூறுப்

வரகுணன்காலத்து, சிதம்பரம் பல்லவராட்சியில் வரவில்லையென்பது முன்னுரைத்த திருக்கோவையார்வாசகத்தால் காணக்கிடக்கிறது. அப்படியானல் அந்தவரகுணன் 5-வது நூற்றாண்டிற்குமுற்பட்டவனாக வேண்டும். இப்பாண்டியனைப்பற்றிய திருவிளையாடல் யாவருமறிவர். இவனைப்பற்றிய பிரமகத்தி, இவன் திருவிடைமருதூர்சென்றுழி

"நீதிவாயிலினின்றதுநீண்மதிற்புறத்தாங்
கேதமேதரவருந்திறலிரும்பிரமகத்தி"

என்றார்வேம்பத்தூர்நம்பி. அப்பர் இச்சிவத்தலத்தைப்பற்றிப்பாடிய பதிகங்களில்

"ஏதந்தீர்க்குமிடைமருதா"
"பத்தர்கட்கங்கண்மேலையேதங்கடீரநின்றார்"
"ஏதங்களானகடிவார்போலும்"

என்பனபோன்றுபாடியுள்ளார். அதனால் அப்பர்காலத்தே வரகுண பாண்டியனுக்கு 'ஏதமேதரவருந்திறலிரும்பிரமகத்தி' திருவிடைமருதூரில் சிவகிருபையால்நீங்கியது அடியார்களறிந்துள்ளாரென்பது யூகிக்கலாம். திருவிளையாடற்புராணத்தில் திருவாலவாய்மேவியசிவபிரானின் திருவருள்பெற்றபாண்டியரின்வரிசை கூறப்பட்டுள்ளது. அந்நூலிலடங்கியகதைகள் கட்டுக்கதைகளெனக்கொண்டாலும் அதிற்கூறியிருக்கும் அரசர்கள் தம்முளுள்ளகாலமுறைமையும் பரம்பரையும் தொன்றுதொட்டுவழங்கிவந்த கர்ணபரம்பரையைத்தழுவியே வரையப்பட்டனவெனக்கொள்ளுதல் தவறாமோ? வரகுணன் 19-வதாகவும் ஞானசம்பந்தர்காலத்தினராகிய கூன்பாண்டியன் 73-வதாகவும் திருவிளையாடலில் கூறப்பட்டுள்ளார். அவ்வாறாயின் வரகுணன் 7-வது நூற்றாண்டிற்கு வெகுகாலத்திற்குமுன்றோன்றியவனாகவேண்டும். மாணிக்கவாசகரை மந்திரியாகக்கொண்ட அரிமர்த்தனபாண்டியன் கூன்பாண்டியனுக்கும் பன்னிருபாண்டியருக்கு முன்றோன்றியவனென்று ஹாலாசியம்புகலும். அவ்வாறாயின் மாணிக்கவாசகர் 4-வது நூற்றாண்டிலிருந்திருக்கவேண்டும். இதுவே எம் கருத்தாகும். அதை யிப்பால் ஒருவாறு தாபிக்கப்புகுவன். இக்கருத்திற்குப்பிறசான்றுமுளது.

மாணிக்கவாசகர் அப்பர்காலத்திற்குமுற்பட்டவரென்பது முன்னரேகண்டுளோம். அன்னவரை நந்தியினவதாரமாக அப்பர் கூறி

யேத்தினராகையாலும், அவர்பாலருளிய திருலீலைகளைக்கூறிச் சிவ
பெருமானைப் போற்றினராகையாலும் நீண்டகாலம் இவ்வைதிகங்கள்
கர்ணபரம்பரையில்வழங்கி நின்றிருந்தாலன்றி அப்பர் இவ்வாறு
பேணிப்புகலாராகையாலும், மாணிக்கவாசகர் அப்பர்காலத்திற்குக்
குறைந்தது 200 வருடங்கட்குமுன்னுனவரென்றுகொள்ளுதலை
வுடைத்தாம். திருக்கோவையாருக்குச் சிறந்ததோருரை பேராசிரிய
ரியற்றியுள்ளாராதலால், அவர்காலத்தில் அந்நூல் தமிழ்த்திருமறை
போலுங்கணிக்கப்பெற்றதென்று கொள்ளலாம். அவ்வாருயின் பேரா
சிரியர்காலத்திற்குச் சாலவும்முன்னர் மாணிக்கவாசகரவதாரகால
மிருக்கவேண்டும். பேராசிரியர் 7-வது நூற்ருண்டின் கடையிலாவது
8-வது நூற்ருண்டினடியிலாவதிருந்திருக்கற்பாலரென ஸ்ரீமான் அன
வரதநாயகம்பிள்ளையவர்கள் நிரூபித்திருக்கின்ருராகையால், மாணிக்க
வாசகர் 4 அல்லது 5-வது நூற்ருண்டிற்குப் பின்தோன்றினவராகா
ரெனலமையும். மாணிக்கவாசகர் திருச்சாழலையும் திருக்கோத்தும்
பியையுந்தழுவி திருமங்கைமன்னரும்பாடியுள்ளார். அவ்வாழ்வார்
வைரமேகன்காலத்தவரென்பது அவர்பாடிய பெரியதிருமொழி இரண்
டாம்பத்துஎட்டாந்திருமொழியாற்புலப்படும்.வைரமேகன்காலம்8-வது
நூற்ருண்டென்றுவரையறுக்கப்பட்டுளது. ஸ்ரீமான் S. கிருஷ்ணஸ்வாமி
அய்யங்காரவர்களும் மிக்கவாராய்ச்சிசெய்துதிருமங்கைமன்னன்
காலம் 8-வது நூற்ருண்டின் முற்பகுதியெனத்தாபித்திருக்கிருர்கள்.
நம்மாழ்வார்தாமும் மாணிக்கவாசகருக்குப்பிற்பட்டவரென்று ஸ்ரீமான்
கோபிநாதராயருமொத்துக்கொள்ளுகிருர். ஆகையால், திருமங்கை
மன்னன் மாணிக்கவாசகருக்கு வெகுகாலத்திற்குப்பின்ருேன்றியவ
ராதலொருதலை. மாணிக்கவாசகர் திருப்பள்ளியெழுச்சிபாடியதுபோல
தொண்டரடிப்பொடிஆழ்வாரும் திருப்பள்ளியெழுச்சி பாடியுள்ளார்.
இவ்வாழ்வார் திருமங்கைமன்னற்கு நூறுவருடங்கட்கு முன்ருேன்
றியவரென்பதான்ருேர்துணிவு. அதனுல் மாணிக்கவாசகர் 6-வது நூற்
ருண்டிற்குமுன்வந்தவரெனக்கொள்ளுதல் பொருத்தமுடையதொன்
ரும். தொண்டரடிப்பொடியாழ்வார்காலத்திற்குமுற்பட்ட சூடிக்
கொடுத்தநாச்சியார், மாணிக்கவாசகரின் குயிற்பத்தையும் திருப்பா
வையையுந்தழுவிப்பாடியிருத்தல் நாமறிவோம். ஆகையால் ஆண்டாள்
காலத்திற்கும்முந்தினவர் மாணிக்கவாசகரென்பது காணக்கிடக்கின்
றது. நம்மாழ்வார் தாமும் மாணிக்கவாசகருக்குப்பிற்பட்டவரென்பது

தமிழ்ப்பாவலர்காலவாராய்ச்சி செய்வார்களின்கொள்கை. நம்மாழ்வார் திருவாய்மொழியின் பாவிலக்கணம் தேவாரத்தின் பாவிலக்கணத்தைப் போன்றது. திருவாய்மொழியென்ற நூற்பெயரே திருவாசகம் என்ற பெயர்பற்றிவந்ததெனக்கொள்ளலாம். மாணிக்கவாசகர் திருச்சதகத்தில்,

> "ஊராமிலைக்கக்குருட்டாமிலைத்திங்குன் றளிணையன்புக்
> காராவடியேனயலே மயல்கொண்டழுகேனே"

என்றெழுதியுள்ளதை மேற்கோளாக நம்மாழ்வார் திருவிருத்தத்தில்

> "எப்படியூராமிலைக்கக்குருட்டாமிலைக்குமென்று
> மப்படியானுஞ்சொன்னேனடியேன்மற்றியாதென்பனே"

எனவெடுத்து வரைந்திருத்தல் கவனிக்கவேண்டியதொன்றும். அது போல,

> "இன்றெனக்கருளிஇருள்கடிந்துள்ளத்தெழுகின்றஞாயிறேபோன்று
> நின்றநின்றன்மைநிலைப்பறநினைந்தேன்நீயலாற்பிறிதுமற்றின்மை [வனே
> சென்றுசென்றணுவாய்த்தேய்ந்துதேய்ந்தொன்றாந்திருப்பெருந்துறையுறைசி
> ஒன்றுநீயல்லைஅன்றியொன்றில்லைஆருன்னையறியகிற்பாரே."

என்ற திருவாசகத்தின் பதமுங்கருத்தும்

> "நின்றவொன்றையுணர்ந்தேனுக்கதனுள்நேர்மையதுவிதுவென்று
> ஒன்றுமொருவர்க்குணரலாகாதுணர்ந்துமேலுங்காண்பரிது
> சென்றுசென்றுபரம்பரமாயாதுமின்றித்தேய்ந்தற்று
> நன்றுதீதென்றறிவரிதாய்நன்றாய்ஞானங்கடந்ததே."

என்ற திருவாய்மொழியிலமைத்து நம்மாழ்வார் பாடியிருப்பதுமீண்டு நோக்கற்பாலது. இவ்வாறு மாணிக்கவாசகரின் வசனமுங் கருத்தும் நம்மாழ்வாரெடுத்தோதப்பெற,மாணிக்கவாசகர் நம்மாழ்வாருக்குநூறு அல்லது ஐம்பது வருடங்கட்கு முன்னாவது பாடியிருக்கவேண்டும். நம்மாழ்வார்காலம் யாது? அவரருளிய திருவாய்மொழி ஸ்ரீரங்கத்திற் பாடவும் அவருக்கு பூசைவழிபாடு செய்யவும் திருமங்கைமன்னன் ஏற்பாடு செய்தனராகையால் நம்மாழ்வார் திருமங்கையாழ்வாருக்கு வெகுகாலம் முற்பட்டவராதல்வேண்டும். அன்றியும் திருமங்கையாழ்வாருக்கு முன்றோன்றியவரும் நம்மாழ்வாருக்கு மிக்க பிந்தினவருமாகிய பெரியாழ்வார், நெல்வேலிவென்றநின்றசீர்நெடுமாறனென்றன்பாண்டியன் காலத்தவரென்பது அவர் பாடிய பிரபந்தங்களாற்

காணலாம். கூன்பாண்டியன் திருமங்கைமன்னனாற் சந்திக்கப்பட்டவரான திருஞானசம்பந்தர்காலத்தவன். அதனால் 7 அல்லது 8-வது நூற்றாண்டின் முற்பகுதியில் திருவரங்கத்திலேயே வைணவரால் எம்பெருமானினம்சமெனக் கருதப்பெற்று நம்மாழ்வார் வழிபடப்பெற்றாரென்றால், அப்புண்ணியபுருடன் 5-வது நூற்றாண்டிற்குப் பின் தோன்றியவரல்லரெனக்கொள்ளுதல் சாலவும்பொருந்தும். தமிழ்நாட்டுப் பழையகால சரித்திரவாராய்ச்சியில் மிக்க வல்லுநராகிய ஸ்ரீமாந்-S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்காரவர்களும் அதே கருத்துக் கொண்டுள்ளார். அவ்வாறாயின் மாணிக்கவாசகர் காலம் 4-வது நூற்றாண்டிற்குப் பிற்பட்டதன்றெனலமையும். இக்கருத்தையொப்பிக் காலஞ்சென்ற Pope ஐயரும் அவரிறப்பதற்கு சொற்பகாலத்திற்கு முன்னனுப்பியவோர் கடிதத்திலெழுதியுள்ளார். ஸ்ரீமாந்-S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்காரும் மகாமகோபாத்தியாய பண்டிதசிகாமணி சாமிநாதையரும் இக்கருத்தைத் தழுவிக்கடிதங்கள் வரைந்திருக்கிறார்கள். Imperial Gazetteer என்ற நூலினும் இக்கருத்து இப்பொழுது அங்கீகரிக்கப்பெற்றுள்ளது. அதனால் மாணிக்கவாசகர் 4-வது நூற்றாண்டிற்குப் பிற்பட்டவராதல்கூடும். ஏனெனில் திருக்கோவையாரில் நூறுபாக்கட்கு அகப்பொருளிலக்கணவமைதிமுற்றும் பெறவில்லையெனக் கடைச்சங்கப்புலவருள் ஒருவராகக் கருதப்படும் கல்லாடர்வாதிக்க, அங்ஙனமாயின் அவ்விலக்கணமுற்றும் உரைப்பாவினாலமைத்துக்காட்டுகவென்னும் வேண்டுகோளுக்கிசைந்து கல்லாடம்பாடினாரென்று ஐதீகமிருத்தலின் உரைப்பாப்பாடின கல்லாடர் காலத்திற்கு பிற்பட்டவரல்லர், மாணிக்கவாசகர் என்பது தெள்ளிதிற் பெறலாம். தலையானங்கானத்துப்போர்புரிந்த நெடுஞ்செழியனைப் புறநானூற்றில் கல்லாடர் பாடியிருத்தலால் அப்பாண்டியன்காலத்தவராவர் கல்லாடனார். நெடுஞ்செழியன் கோவலன்பாற்செய்த கொடிய பிரவர்த்தியால் சிலப்பதிகாரக் கதாநாயகியாகிய கண்ணகியின் பெருந்துயரும் கோரமான மரணமும் நேர்ந்தனவென்பது யாவருமறிவர். அக்கண்ணகிக்குக்கோயிற்கட்டி செங்குட்டுவன் திருவிழாக்கொண்டாடியகாலத்து இலங்கைமன்னன் கஜபாகு உடனிருந்தானென்பது சிலப்பதிகாரம் வரந்தருகாதை அடி 160-ஆல் அறியக்கிடக்கின்றது. கஜபாகு தென்னிந்தியாவுக்குச்சென்று பத்தினிதேவியின்வளையொன்று இலங்கைக்குக்கொண்டுவந்ததா

இராஜாவளியென்ற இலங்கைச்சரித்திரங்கூறும். கஜபாகுவின் ஆட்சி கி. பி. இரண்டாம்நூற்றுண்டென்றுதுணியப்படுவதால் கல்லாடர் காலம் கி. பி. இரண்டாம்நூற்றுண்டிற்கு சமீபித்தகாலமெனல் பொருந்தும். ஆகவே எவ்வகையானும் மாணிக்கவாசகர் கடைச்சங்கக் காலத்திற்குசமீபத்திற்றோன்றியவரென்றுகொள்ளுதல் அமையும். மேலும் மாணிக்கவாசகர் சிதம்பரத்தில் சமயவாதுக்காக இலங்கை மன்னனோடுவந்த புத்தசமயத்தாரை வாதில்வென்று இலங்கையரசின் புத்திரியை புத்தசமயத்தினின்று விடுவித்து சைவசமயவழிப்படுத்தினு ரென்றும் அவ்வாதே திருச்சாழலிலடங்கியிருக்கிறதென்றுங் கூலனர் கூறுப. கி. பி. 254 முதல் 267 ஈறுக இலங்கைமன்னனுயிருந்த மேக வர்ணபயன்காலத்திற்சோழநாட்டுச்சைவசமயாசாரியனொருவனுக்கும் இலங்கை புத்தமதாசாரியனொருவனுக்கும் வாதுநடந்ததென்றும் சைவசமயாசாரியன் வாதில்வென்று இலங்கைமன்னனுடைய விளைய மகளைச் சைவசமயநெறிப்படுத்தினனென்றும் மகாவம்சோவென்ற இலங்கைச்சரித்திரங்கூறும். இவ்வரலாறு மாணிக்கவாசகரைக்குறிக்கு மெனக்கொள்ளுதல் மிகவும்பொருத்தமுடையதே. அவ்வாறுனுல் மாணிக்கவாசகர் 3-வதுநூற்றுண்டி னிடைப்பட்ட காலத்திற்குப் பிற் பட்டவரல்லரென்றுதுணிதல் தவருகாது என்றுகூறலாம். ஆகவே மாணிக்கவாசகர் இற்றைக்கு ஏறக்குறைய 16 அல்லது 17 நூற்றுண்டு கட்குமுன், "கொண்டலனைகண்டனருட் கொண்டுதமிழ்பாடித் தொண்டுபடுமன்பராய்," 'தெளிபொருள்சிவமேயென்றுபொருந்திய மனத்தராய்' சிந்தையுஞ்செயலு மொருங்கேசிவன்வழிப்படுத்தி 'பேரறி யாத வனேகபவங்கள்பிழைத்து' 'நாமெனவந்தபிணக்கறுத்து,' சிவாநந்த வெள்ளத்தில் மூழ்கிக்களித்து, சிவநெறிவிளக்கித் தாம்பாடிய தமிழ் மறையின்சொற்பொருளாய்நின்ற மெய்ப்பொருளாகிய அம்பலத்தாடு மையனது ஒள்சுடர்க்கொழுமலர்த் திருவடியிணையில் ஒன்றியடங்கினு ரெனக்கோடல் சாலவும்பொருந்தும்.

கே. ஜி. சேஷையர்.

உ

சிவமயம்

திருமழபாடியா - திருமழுவாடியா?

பொன்னார்மேனியனேபுலித்தோலையரைக்கசைத்து
மின்னார்செஞ்சடைமேல்மிளிர்கொன்றையணிந்தவனே
மன்னேமாமணியே மழபாடியுள்மாணிக்கமே
யன்னேயுன்னையல்லாலினியாரை நினைக்கேனே.

என்பது சிவபெருமானாற்றடுத்தாட்கொள்ளப்பட்ட ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகளது தேவாரமாம்.

மழபாடியென்னுந்தலமானது, திருவையாற்றின்வடமேற்காய்ச் சுமார் 2 நாழிகைவழி தூரத்திற் கொள்ளிடத்தின்வடகரையிலுள்ளது. கொள்ளிடநதி கோயிலைவளைந்து சந்நிதிக்கெதிரில் உத்திராபிமுகமா யோடுகின்றது. இப்பொழுது இதனைத் திருமலவாடி என்கின்றனர். இத்தலத்திற் பல கல்வெட்டுச்சாசனங்கள் நிறைந்திருக்கின்றன. அவைகளிலெல்லாம் திருமழுவாடியென்றே காணப்படுகின்றது. உதாரணம்:—(கோபுரவாசற்றென்புறம்சுவரில்)

I. (1) ஸ்வஸ்திஸ்ரீ கோராஜகேசரிபன்மரான திருபுவனசக்கரவர்த்திகள். (2) ஸ்ரீ வீரராஜேந்திரதேவர்க்குயாண்டு மவது. கன்னிநாயிற்று அமரபக்ஷ. (3) த்து நாள்......வெள்ளிக்கிழமையும் ....(4)ன வடபக்கல் ராஜராஜவளநாட்டுப் பொய்கைநாட்டுற்ற நாட்டுநா (5) டட.:....உடையார் திருமழுவாடிஉடையநாயனார் திருக்கோயில்............(கோயில்மதிற்சுவர்தென்புறம்)

II. புகழ்சூழ்ந்தபுணரியகழ்சூழ்ந்தபுவியில்
பொன்னேமியளவுந் தன்னேமிநடப்ப

....

என்ற முதற்குலோத்துங்கனது இரண்டாவது மெய்க்கீர்த்தி முழுவதுங்கண்டு பின், வீற்றிருந்தருளியகோராஜகேசரிபன்மரான சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்கசோழதேவர்க்கு யாண்டு மரு வது. குலோத்துங்கசோழவளநாட்டுப் பொய்கைநாட்டு திருமழுவாடி உடையமஹாதேவர்க்கு இரவும்பகலும்.................................
(அதேசுவரில் மற்றொன்று)

III. பூமாலைமிடைந்துபொன்மாலைதிகழப்
பாமாலைமலிந்தபருமணித்திரள்புயத்

தென்னும் விக்கிரமசோழதேவருடையமெய்க்கீர்த்திக்குப்பிறகு விக்கிரமசோழதேவர்க்குயாண்டு ௰௩வது. திரிபுவனமுழுதுடைய வளநாட்டுபொய்கைநாட்டுஉடையார்திருமழுவாடிஉடையார்கோயிலில் ஆதிசண்டேஸ்வரர் ஆடு௬௰௰......................................
(வடபுறச்சுவரில்)

IV. ஸ்வஸ்திஸ்ரீ சீர்மன்னியிருநான்கானதிசைவிளங்க திருமடந்தையும் போர்மன்னுசெயமடந்தையும் புவிமடந்தையும்............ மறையின்நெறிவாழவருநாள்... ...செம்பொன்வீரஸிம்ஹாஸநத்துப் புவனிமுழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய கோவிராஜகேசரி பன்மரான திரிபுவனசக்கரவர்த்திகள் ஸ்ரீராஜராஜதேவர்க்கு யாண்டு மூன்றாவது மகரநாயிற்றுப்பூர்வபக்ஷத்துஏகாதசியும் சநிக்கிழமையும் கூடிய.............ராசராசவளநந்தவளநாட்டுப் பொய்கைநாட்டு உடையார் திருமழுவாடிகோயில் உடையார்.

இப்படிச்சாசனங்கள் பலவுள.

இவற்றின்மாத்திரமன்றி இத்தலபுராணமான திருமழுவாடிப் புராணத்தின் காப்புச்செய்யுட்களிலும் இத்தலம், மழுவை யென்றே கூறப்பட்டிருத்தல் காண்க. உதாரணம்:—

வடமொழிப்படமழுவையின்புராணத்துவகுத்த
திடமொழிப்படச்செந்தமிழாகவேசெப்பக்
குடமொழித்திடுமோதகங்கொடுப்பவர்கொடுஞ்சங்
கடமொழித்திடுங்கடமொழியாவிபங்காப்பு.

இளநிலவுமிசையிலங்கமிடற்றின்மரகதச்சோதியெரிக்கமிக்கோ
ருளநிலவுமடித்தலத்துப்பதுமராகச்செவ்வியொளிரவீறுந்
தளநிலவுமீரேழுசகதண்டமுழுதினையுந்தாங்கியோங்கும்
வளநிலவுமழுவையினில்மணிவயிரத்தூணினையாம்வழுத்தல்செய்வாம்.

மழுவாடியெனப்பெயர்வரக் காரணமென்னவெனின்? வேய்ந்தநீள் சடைமிருகண்டமாமுனிமெய்த்தவப்பயனு வாய்ந்தவெண்ணிரண்டு

வயதுபெற்ற மார்க்கண்டமுனிவர் சிவபெருமானது ஆநந்தத்திருத் தாண்டவத்தைக்காண்பான்விரும்பி, கதிரோனதொளிபரக்கக் கண்டோமாயினும் சூரியகாந்தத்தினிடத்தே சுடர்தோற்றக்காணுமா போலத்தெய்வநாயகன்றிருவிளையாடற்றலமொன்று காணக்கருதிச் சென்றவிடத்து இந்நகரையடைந்து இதனிலுள்ளசிவகங்கைத்தடத்து மூழ்கிச் சிவபெருமானைக்குறித்து அரியதவமியற்றினர். இறையோன் திருவுளமிரங்கி வைசாகமாதத்துப்பௌரணமியி லுன்மனோரதம் நிறைவேறுமென்றுகூறி அரக்கராலிடலுற்றதேவர்களின்பொருட்டு மழுவையங்கையேந்திக் கடைக்கணித்தருள அதுசென்று அசுரர் சேனையை யடர்த்துடன்மீள அதனுடன்சென்று மார்க்கண்டமுனி வருக்குக் காக்ஷிதந்தருளினமையின் இத்தலம், திருமழுவாடி யாயிற்று.*

மருமலர்மழைகவேிவானவர்வணங்கியேத்தக்
கருமழையனையகூந்தற்கவுரிகண்டினிதுபோற்றப்
பொருமழுவங்கையேந்திப்புனிதனின்றுடலாலே
பெருமழுவாடியென்னும்பெயர்பெறுமந்தமூதூர்

இஃதிங்ஙனமாக மழபாடியென்பதுஎவ்வாறாயிற்றென்று ஊகிக் குங்கால், காலக்கிரமத்தில் திருமழுபாடி என்பது திருமழபாடி யென்றாயிற்றென்னலாம். இரண்டாவது திருநிலைவாசலின்தென்புறம் சுவரில் காணப்படும்சாசனத்திற்றான் திருமழுபாடி யென்றெழுதப் பட்டிருக்கிறது.

அதுபின்வருமாறு:—

(1) ஸ்வஸ்திஸ்ரீ சவுமியவருஷம் கார்த்திகைமீ˚ ௰௨ திரு (2) மொத்து முதலி காணி உடையகைக்கோளால் வயித்தியநாத விணக்கத்த (3) மகன் பெருவேம்புடையான் வயித்தியநாத காலிங்கராயனுக்கு கல்வெட்டிக் (4) குடுத்தபடிநாயனார்திருமழுபாடி உடையநாயனார் திருக்கோயிலில்அண்ணபட்.........................

இதுமுதற்றான் திருமழபாடியென்றுவழங்க ஆரம்பித்திருக்க வேண்டும். மூவர்முதலிகள்காலத்திற்குப்பிற்பட்ட இராசராசன் முத லிய சோழவரசர்கள்காலத்தில் இத்தலம், திருமழுவாடியென்றே

---

* இதற்குமுன் திருமழபாடி

வழங்கிவந்திருக்கின்றதென்பது கர்ணபரம்பரைச் செய்தியல்லவென்பதும், சாசனங்கொண்டுதுணியப்படுவதென்பதும் நன்கு அறியக்கிடத்தலின், நாயன்மார்மழபாடியென்றுபாடியிரார்களென்பது ஒருதலை. அதுவன்றியும், மழபாடி யென்பதற்குப் பொருள்கொள்ளுதலியலாதகாரியமாயிருக்கின்றதும் கரதலாமலகமாம்.

ஆகையா னித்தலம் திருமழுவாடியேயென்பது துணிதற்குரியதாம்.

திருவாரூர்-சோமசுந்தரதேசிகன்,
இலக்கணவிளக்கபரம்பரை.

௨

தொண்டைமான்சாசனம்.*

:(o):

ஸ்வஸ்திஸ்ரீ ஸாலிவாஹநஸகாப்தம் இதன்மேல் செல்லாநின்ற நந்தனநாம ஸம்வத்ஸர (ர)த்து உத்தராயணத்து ஸௌமிரயிதாவில் மாகமாசத்து பூருவபட்சத்தில் சுக்கிரவாரமும் சத்தமியும் ரோகணிநட்சத்திரமும் சுபயோக சுபகரணமும்பெற்ற புண்ணிய தினத்தில் ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுரன் அரியராயிரதன் விபாடன் பாஷைக்குத் தப்புவராயிரகண்டன் மூவராயிரகண்டன் கண்டனுடுகொண்டு கொண்டனுடுகொடாதான் பூருவதெட்சிண பச்சிமோத்தரதிக்குவிசையஞ்செய்து எம்மண்டலமும் திறைகொண்டருளிய ராசாதிராஜன் துலுக்கர்தளவிபாடன் துலுக்கர்மோகந்தவிழ்த்தான் ஒட்டியர்தளவிபாடன் ஒட்டியர்மோகந்தவிழ்த்தான் பாண்டிமண்டலத்தாபனாச்சாரியன் சோழமண்டலபிரதிட்டாசாரியன் தொண்டைமண்டலதுரந்தராதிபன் கீர்த்திப்பிரதாபன்வீரப்பிரதாபன் புவனேகவீரன் சிவபூசாதுரந்தரன் சிவகாரியாதுரந்தரன்

---

* இத்தாம்ரசாசனம் திருச்சி டி. மு. கோர்ட்டில் 1853-ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதன் நகல் ஒன்று, திருச்சி நேஷனல் ஹைஸ்கூல் தலைமைத்தமிழ்ப் பண்டிதராயிருந்து சில வருடங்கட்கு முன்னர் காலஞ்சென்ற ஸ்ரீமத்-தி. ச. ஆறுமுகநயினாரவர்கள் வீட்டிலிருந்து கிடைத்தது.

வடவெள்ளாறு சுந்திரபாண்டியவளநாட்டு இளங்கோனாட்டு
அறந்தாங்கிஅரசு அச்சமறியாதான் ஆட்டுக்கு ஆணைவழங்கு
மதுலன் சேரன்பாட செந்தமிழ்புனைந்தபுங்கவன் கருதுமாசாகா
கமலசந்திரன் கொற்றக்குடையும் தவண்டையுமுள்ளகுணசீலன்
தன்னையடைந்தாரை தானாககாக்குமபிராமன் நடைகற்றபோதொ
ருடைகற்றதீரன் ஏழுநாழிகையில் ஈழந்திறைகொண்டபெருமாள்
புற்றுமாத்தியும் பொந்தாலும்போகேனென்றுவென்றபுரந்தரன்
தலைமலைகண்டான் பிணமலைகண்டான் முகவின்கிழத்திரியு
மிளவன்னியமிசுரகண்டன் திருமிழலைத்திருநாடன் மல்லையாபதி
மயிலையாதிபதி அவ்வைக்கவிகொண்டவன் செயனைவென்றவன்
பட்டனுக்கு முதுகுசாய்த்தான் மரைபுக்கார்காவலன் அடியார் வேலைக்
காரன் காஞ்சிபுராதீஸ்வரன் ஆளுடையதம்பிரானார் ஸ்ரீவாஷலகூநு
ஸ்ரீஜீது அவுடைய றெகுநாத வணங்காமுடி தொண்டைமானாரவர்கள்
புத்திரன் அருணாசலவணங்காமுடி தொண்டைமானாரவர்கள்1, திருப்
பெருந்துறையாவுடைய பரமசுவாமியார்க்கு உஷாகாலபூசைக்குப்
பரதேசிமுத்திரை அம்பலத்தாடும்பண்டாரம்பாரிசமாகநடக்கிற
தனது அபிஷேகக்கட்டளைக் கிராமங்களுக்கெல்லாம் சருவமான்னிய
மாக தருமசாஸன பட்டயம் கொடுத்தபடி கிராமங்களாவது கல்லிங்க
நாடு பைங்கானாடு தானவனாட்டில் காலகம் உள்ளூர் உக்கடை

---

1. இவன் கடைச்சங்கநாளில் கச்சிநகரத்திருந்து ஆட்சிபுரிந்த தொண்டைமான் இளந்திரையன்வழித்தோன்றினோனவன். இப்பகுதியினர் சோழர் வழித்தோன்றி நாடாட்சி தனியேயளிக்கப்பெற்றோராவர். இதனை நன்கு விளக்கக்கூடிய பழஞ்சரித மொன்றுளது. அதாவது நாகப்பட்டினத்துச் சோழனொருவன் நாகலோகஞ்சென்று ஓர் நாககன்னியைப்புணர, அவள் யான் பெற்ற புதல்வனை என்செய்வேனென்றபோது தொண்டைக்கொடியை யடையாளமாகக்கட்டிக் கடலில்விட (டு) அவன்வந்து கரையேறின் அவனுக்கு யான் அரசுரிமையும் நாடாட்சியும் நல்குவேனென்று அச்சோழன்கூற அவளும் தன் புதல்வனை அங்ஙனம் வரவிட, அவனைத் திரைகொணர்ந்தமையால் அவனும் அவன் வழித்தோன்றினோரும் திரையன் திரையர் எனப் பெயர்பெற்றதோடு அவன் வழியினரெல்லாம்தொண்டையேசூடிப்போந்தகாரணத்தால் தொண்டைமான்கள் எனவும் வழங்கப்பட்டனரென்பதேயாம். இவ்விஷயம் மேற்கூறிய தொண்டைமான் இளந்திரையன்மீது கடியலூருருத்திரங்கண்ணனார் பாடியுள்ள பெரும்பாணாற்றுப்படையானும் அதற்கு நச்சினார்க்கினியர்கூறிய வுரையானும் நன்கு தெளியப்படும். இனி, தொண்டைமான்கள் ஆட்சி புரிந்த நாடும் தொண்டைநாடென வழங்கப்பெற்றதுபோலும். இச்சாசனத்தில் சொல்லப்படும் அருணாசல வணங்காமுடித் தொண்டைமானது வம்சத்தினர், தஞ்சை ஜில்லா பட்டுக்கோட்டைத்தாலூகாவில், இக்காலத்துமிருக்கிறதாகச் சிலர் கூறுகின்றனர்.

பழநகரம்வடவெள்ளாற்றுநாட்டில்சிறுவயல்,ஈச்சுங்குடி,காரணிகாடு, ஆலேயேம்பல், ஒ(த)யமாணிக்கம், மானவநல்லூர், களக்குடி, எய்ய மங்கலம், பெருங்காடு, விளங்குளம்வட்டத்து அஞ்சில்ரெண்டு சீமையில் முலவயல் திருமழலைநாட்டு வெள்ளாம்பற்றில் புண்ணிய வயல், எழுநூற்றுமங்கலம், உலகந்தணியேந்தல், இரையாமங்கலம், தவசியார்பட்டமங்கை, சித்திரவிடங்கம், மங்கலம், கொனப்பன்வயல், கீழகாரை,காட்டுக்குடி,இரும்பானாடு,தொமொகிநாட்டுபற்றில் மதகம் தாணிக்காடு தில்லைவயல் செய்யிவயல் திருவாகுடி இதுமுதலாக அபிஷேககட்டளைக்குநடக்கிறகிராமங்கள் ஏந்தல் உள்கிடைக் கெல்லாம் இரைவரிமுதலாக ஊழியமுள்பட சகலமும் வேண்டா மென்றுசருவமானியமாககட்டளையிட்டோம். ஆனபடியினாலே ஆசந்த்ராக்கஸ்தாயியாக அபிஷேகக்கட்டளைக்குமான்னியமாக அனுப விச்சுக்கொள்ளக்கடவதாகவும். நம்மைச்சார்ந்தமனுஷர்மக்க ளெல்லாம் இந்த தர்மசாதனப் பட்டயப்படிக்கு ஒரு சில்லரையனும் வாராமல் புண்ணியத்தைப்பரிபாலனம்பண்ணி பூர்வாபூர்வம் நடந்த படியே உத்தரோத்தரமாக நடப்பிக்கக்கடவோனாகவும். இந்தப்படிக்கு திருப்பெருந்துறையாவுடையபரமசுவாமியளுக்கு அம்பலத்தாடும் பண்டாரத்தின்பாரிசமாகநடக்கிற தனது அபிஷேகக்கட்டளைக் கிராமங்களுக்கெல்லாம் நாம் மனப்பூருவமாக அபிமானிச்சு சருவ மான்னியமாக கட்டளையிட்டு தர்மசாதனப்பட்டயம் கொடுத்தோம் இந்த தர்மத்தைப் பரிபாலனம்பண்ணினவர்கள் கெங்கைக்கரையிலும் ஆதிசேதுவிலும் கோடிபிருமபிரதிட்டையும் கோடி சிவலிங்கபிர திட்டையும்பண்ணினதர்மத்தையடைவாராகவும். இந்ததர்மத் துக்கு யாதாமொருவர் விகாதம்பண்ணினவர்கள் கெங்கைக் கரையிலும் ஆதிசேதுவிலும் கோடிகோவை வதைபண்ணின தோழத்திலும் மாதாபிதாவைவதைபண்ணின தோழத்திலும் போவர்களாகவும் :

தானபாலனயோர்மத்யே தானாச்ச்²ரேயோऽநுபாலனம்
தானாத்ஸ்வர்க³மவாப்னோதி பாலனாத³ச்யுதம் பத³ம்
ஸ்வத³த்தாத்³த்³விகு³ணம் புண்யம் பரத³த்தானுபாலனம்
பரத³த்தாபஹாரேண ஸ்வத³த்தம் நிஷ்ப²லம் ப⁴வேத். (ஶ்லோகம்)

(ஒப்பம்) இந்த தர்மசாதனப்பட்டயம் எழுதினேன் கோவில் கணக்கு சித்திரபுத்திரன் மகன் அவாத்தான் யெழுத்து.

யாதாஸ்து :— அசலாதிரவு முன்புரம் தலப்பில் உபதேச அவசாமாக ச பிரதிமையளும் பீடத்தின்..............மும் எழுதியும் ரு..............எழுத்துக்களையும்..........கி மேலாக உ எழுத்துக் களையும் ஒட்டியும் ஓரங்களில் உ இடத்தில் வீரியும் நடுவில் கூ இடத்தில் துவாரம் விழுந்தும் பாசிபுடித்துமிருக்கிறதுமல்லாமல் ஷை பின்புறம் ரு வரிக்குமேலாக அ எழுத்து ஒட்டியும் கடைசியில் சூலமும் எழுதியிருக்கிறதுமன்னியில் இந்த நகல் முன்புரம் 31-ம் வரிக்குமேலாக உ எழுத்து ஒட்டியுமிருக்கிறது.

துஅ௱ருயிந௳ஷு செப்டம்பர்மீ } (ஒப்பம்.) வாதிக்காக கு. மா. கிருஷ்ண சாஸ்திரி, வக்கீல்.
1853ஷு செப்டம்பர்மீ 15௳ தாக்கல்.

(ஒப்பம்) திரு. அதிசயம்பிள்ளை, முன்சீப்.

(True copy.)

(Signed). D. S. M. Grinfell,
Ag. Sub-Judge.

Filed on the 26th February 1859.

(True copy.)

T. V. சதாசிவப்பண்டாரத்தார்,
திருப்புறம்பயம்.

மொழிநூற்கருத்து.

இயற்கைப்பொருளில்லாமற் செயற்கைப்பொருளுண்டாகாமை போல இயற்கையோசையில்லாமல் செயற்கையோசையுண்டாகாது.

இயற்கையின் இலட்சணம் எங்கும் ஒன்றே.

எல்லாப்பொருள்களுக்கும் எல்லாச்செயல்களுக்கும் குழந்தைப்பருவமொன்றுண்டு.

உலகம் குழந்தைப்பருவமாக இருந்தகாலத்து முதல்முதல் உண்டான பாழைக்கு இயற்கையோசையே ஆதாரம்.

பாழை=பாஷை, இது சித்தர் வழக்கு.

அந்த இயற்கையோசை இரண்டு.

1—எழுத்தோசை (மொழிநூல் இலக்கணவியல் 6-வது பக்கம்

2—பொருளோசை, ("பாயிரவியல் 83-வது பக்கம்.")

எழுத்தோசையிலிருந்து எழுத்துக்களுண்டாயின. அவ்வெழுத்துக்களின்சார்பால் பொருளோசையிலிருந்து சொற்களுண்டாயின.

பொருளோசையாவது அர்த்தத்துக்கு ஆதாரமான ஓசை.

இதுவே முதல்முதலுண்டான சொற்கூட்டம்.

சொற்கூட்டம்=பாழை.

பாழையென்பது நாவின் இயற்கைநிகழ்ச்சியின் அமைதி ஆதலால் எழுத்தோசையும் பொருளோசையும் அவ்வியற்கை நிகழ்ச்சிக்கு ஆதாரமாகின்றன.

இயற்கையோசைக்கு முறையின்படிநடைபெறும் பாழையே உலகில் முதல் மக்களது நாவிற்கு உச்சரிக்க எளிமையாக இருக்கும்.

உலகிலுள்ள உயிர்ப்பொருள், உயிரில்பொருள்களின் வடிவமும், இயற்கைவடிவாகியதிரட்சியிலேயேஅடங்கிவிடும். அப்பொருள்களின் இயக்கமாகிய செயல்களும் அத்திரட்சியின் அமைதியாகவே நடைபெறுவனவாம். இந்நடையே அப்பொருள்களுக்கு எளிமையாகற்பாலது.

இனி முதல் முதலுண்டான அச்சொற்கூட்டம் இவ்விலக்கணம் பெற்றிருக்கின்றபடியாலும்

தொல்காப்பிய முதலிய தமிழிலக்கணங்கள் நாவின் இயற்கை நிகழ்ச்சியை விளக்கிக்கூறுகின்றபடியாலும் அச்சொற்கூட்டம் பழந் தமிழென்பது மொழிநூலின் கருத்து.

அச்சொற்கூட்டம் இவ்விலக்கணமுடையதென்பது மொழி நூல் முதனிலையியலால் விளக்கமாகும்.

சுல்—சுலா=திரட்சி, வட்டம்.

இதனால் தமிழ்ப்பாஷைக்கு மாத்திரம் நாவின் இயற்கையின்படி இலக்கணமுண்டாயதெனப்புலனாகின்றது.

தமிழிலக்கணத்துள்

1. மொழி முதலெழுத்து (மொழிநூல் இலக்கணவியல் 22-வது பக்கம்.

2.	மயக்கம்	(,,	,,	34-வது பக்கம்.)
3.	குற்றியலுகரம்	(,,	,,	17-வது பக்கம்.)
4.	குற்றியலிகரம்	(,,	,,	19-வது பக்கம்.)
5.	உடன்படுமெய்	(,,	,,	90-வது பக்கம்.)
				அய் இ வாய்பாடு முதலியன.
6.	சொல்வளர்ச்சி	(,,	,,	111-வது பக்கம்.)
				இடையிற் பிற எழுத்துவரல்.

முதலியனவெல்லாம் நாவின் இயற்கையின்படியே அமைந்திருக்கின்றன.

அதாவது உச்சரிக்க எளிமையாக இருப்பது.

ஆரியத்தினுள்ள உயிரெழுத்துக்களில் ரு, ரூ, லு, லூ, என்பவையும், மெய்யெழுத்துக்களில் உரப்பல் (வ) எடுத்தல் (ம) கனைத்தல் (ஸ). ஆகிய உச்சரிப்புகளும், சம்யுக்தங்களும் (க ๅ) விசர்க்கங்களும் (கஃ) ஹகார ஷகார முதலிய உச்சரிப்புகளும், அவ்வியற்கையெழுத்தோசையிலிருந்துண்டான எழுத்துக்களில் இல்லாமையாலும்;

வல்லினமெய்யீற்றுச்சொற்களும் லகர ரகர டகர முதன் மொழிகளும் மூவசைச் சொற்களும் மற்றைய கடின உச்சரிப்புகளும் அவ்வியற்கைப்பொருளோசையிலிருந்துண்டான சொற்களில் இல்லாமையாலும் முதல் முதலுண்டான அச்சொற்கூட்டம், ஆரியமாகாது. மற்றையபாஷைகளும் விகுதி முதலியன இல்லாமல் ஓரசை ஆக்கச்சொற்களால் நடைபெறுகின்றமையின், அச்சொற்கூட்டம் பழந்தமிழாகின்றது. இப்பழந்தமிழ் நெடிதுகாலம் ஒலிவடிவிலேயேயிருந்து பிறகு வரிவடிவுபெற்றது. விகுதிமுதலியன செந்தமிழிலுண்டாயின.

(மொழிநூல் இலக்கணவியல் 74-ம் பக்கம் விகுதி)

எண் மூன்று.

ஒருமை சின்மை பன்மை என்பனவாம்.

இவ்விலக்கணம் முதல்முதல் தமிழில்தான் உண்டானது.

(மொழிநூல் இலக்கணவியல் 106-வது பக்கம்.

"ஓரெழுத்தொருமொழி ஈரெழுத்தொருமொழி
இரண்டிறந்திசைக்குந்தொடர்மொழியுட்பட
மூன்றேமொழிநிலை தோன்றிய நெறியே"

என்பதன் உரையில் "சில பல என்னும் தமிழ்வழக்குநோக்கி" யென்பர் நச்சினார்க்கினியர்.

சில்=இருமை.

"பொன்மலர் பொதுளிய சின்மலர்பழிச்சுதும்"

(மதுரைக்கலம்பகம்)

(3) ஏழ்

ஏழென்னும் எண்ணுப்பெயர் சூரியனிடத்துள்ள நிறங்களின் தொகையால் உண்டாயது.

எல்—ஏள்—ஏழ். எல்=சூரியன்.

"ஏழென்கிளவி உருபியனிலையும்"

எனத் தொல்காப்பியர் புள்ளிமயங்கியலிற் கூறுவர்.

ஏழென்பது மெய்யீற்றுமொழியாகலின்

சூரியனிடத்தில் ஏழ்நிறமுண்டென்பது தமிழரே அறிந்திருக்கின்றனர்.

இங்ஙனமே ஒன்றுமுதலிய எண்ணுப்பெயர்களுக்கும் காரணமுண்டு.

வேந், வேரின்=முதுகு.

பழந்தமிழில் நகரமெய்யீற்றுச்சொற்களே நடைபெற்றமையின், செந்தமிழில் னகரமுண்டானபிறகு அந்நகரமெய்யீற்றுச் சொற்களுள் பெரும்பான்மையும் னகரமெய்யீற்றுச் சொற்களாகவே நடைபெறத்தொடங்கின. வெந்முதலிய சில சொற்கள்மாத்திரம் அந்நகரமெய்யீறாகவே நின்றன.

அவற்றை அகத்தியனாருங்கூறினர். தொல்காப்பியனாரும் கூறினர்.

"ஞநமவவென்னும் புள்ளிமுன்னர்
யஃகானிற்றல் மெய்பெற்றன்றே"

(தொல், எழு, நூல்மரபு, 27-சூ)

உலகம் குழந்தைப்பருவமாக இருந்தகாலத்துண்டான எழுத்தும், சொல்லும், சந்தியும்

உலகம் முதிர்ந்தபருவமடைந்தகாலத்துண்டான எழுத்தும், சொல்லும் சந்தியும் தமிழிலிருக்கின்றன.

உதாரணம்.

குழந்தைப்பருவம்.

1. எழுத்து.

அ ஆ இ ஈ உ ஊ எ ஒ க ங ச ஞ ல முதலியன.

2. சொல்

அம்மை, அப்பன், அத்தன், சுலா, நிலா, பல், கல், நாய், குண்டம், தலம், பக்கம், பச்சம் முதலியன.

3. சந்தி

மர × அடி = மராடி. மண்பானை பலாஅருமை கோயில் முதலியன.

இவை நாவிற்கு எளிமையாக இருக்கும்.

முதிர்ந்தபருவம்

1. எழுத்து

ஐ, ஔ, ள ழ ட ண ற ன

2. சொல்

நிலவு, குன்றம், தனம், பட்சம், காட்சி, சூழ்ச்சி, முதலியன.

குண்டம்—குன்றம். ஒன்று—ஒன்று.

3. சந்தி

மரவடி, மட்பானை, பலாவருமை, கோவில், பொற்றூலி, உறிக் கட்டயிர் முதலியன.

இவை நாவிற்குக் கடினமாக இருக்கும். அதாவது நாவு திருந்திய பிறகு உண்டாயினவாகும். சிறுவர்கள் பேசும்போது கவனித்தால் இந்த உச்சரிப்பின் இலக்கணங்கள் விளக்கமாகும். ஒவ்வொரு வயதிலும் கவனிக்கவேண்டும். அப்பொழுதுதான் உச்சரிப்பின் வளர்ச்சி புலனாகும்.

ஆரியத்திலுள்ள எழுத்துகளும் சொற்களும் சந்திகளும் இவற்றினும் கடினமாக இருக்கின்றபடியால் அது உலகம் குழந்தைப்பருவமாக இருந்தகாலத்துண்டான பாஷையாகாது.

(மொழிநூல் பாயிரவியல் 86-வது பக்கம் கவனிப்பு)

குண்டம் = மகம். குண்டம்—கொண்ட = மகம் (தெலுங்கு)

தலம் = இகம். இது பழந்தமிழ்ச்சொல்.

வழுதலம்—வழுதலை—பார்ப்பாரமுள்ளி. முள்நிறைந்த இலைகளையுடையதென்பதுபொருள். வழுதலை கத்தரிச்செடியுமாம் அதன் இனமென்பது வள்—கூர்மை—முள்.

வளுதலம்—வழுதணம்—வழுதுணை=கத்தரி. தலம்—தளம்—தளிர்—தளிர்த்தல். தளம்—தழை—தழை—தழைதல். தலமென்பதற்கும் ஓர் முதற்சொல்உண்டு.

பக்கம்—பச்சம்—பட்சம். ககரம் சகரமாகும்.

பகு—பக்கம். வலம் இடமென்னும் இருபிரிவுடையதென்பது பொருள்.

"பச்சமுடையவடிகள்" (சம்பந்தர் தேவாரம்.)

6. பெயர்வினை

முதல் முதல்பெயரும் அதன்பின் வினையும் உண்டாயின, சிலர் முதல்முதல் வினையுண்டாயின என்பர்.

அது பொருந்தாது. பெயர்வினை யென்னும் முறைமைப்பாடே அதனை விளக்குகின்றது. எந்தப்பாழையிலும் வினைபெயர் என்னு முறைமையில்லை.

"தொழிலாவது பொருளதுபுடைபெயர்ச்சி" என்பர் நச்சினார்க்கினியர். (மொழிநூல் இலக்கணவியல் 111-வதுபக்கம் சொல்)

7. "காலமுலகம் உயிரே உடம்பே(தொல் சொல்-583) என்ற சூத்திரத்தின் கீழ் காலம் உலகம் என்பன வடசொல் அன்று என்பர் நச்சினார்க்கினியர்.

"நிலந்தீநீர்வளிவிசும் போடைந்தும்
கலந்த மயக்கம் உலகமாகலின்" (மரபியல்) (தொல்—பொருள்) என்பர். இதனால் உலகமென்பது ஐம்பெரும்பூதங்களின் கலந்த கூட்டத்துக்கு ஓர் பெயராகின்றதெனப் பொருள்படுகின்றது.

உலகமென்னும்சொல்லுக்கும் திரண்டவடிவுடையதென்பது பொருள்.

உலம்—உலகம்.

உலம்—உலக்கை. திரண்டிருப்பது.

உலம்—உலண்டு=ஓர் புழு.

உலம்=திரட்சி.

உலமென்பதற்கும் ஓர் முதற் சொல் உண்டு.

(8) தமிழர் சூரிய மத்திய சித்தாந்திகள்

அது சூரியனையுணர்த்தும் ஞாயிறுமுதலியசொற்களால் துணியப்படும்.

ஞாயிறு=சூரியன்.மற்றைகிரகங்களுக்கு நடுவிலிருப்பதென்பது பொருள்.

நாயிறு ஞாயிறாயிற்று. இதன்தாது நாய்.

நாய்:—

1—நடு.

2—சுணங்கன்.ஊர்நடுவில் திரிவதென்பதுபொருள்.

"நாய்தான்போலநடுவேதிரிந்தும் உமக்காட்பட்டோர்க்கு" (சுந்தரர் தேவாரம்)

நா—நாய் நா=நடு.

நா என்பதற்கும் ஓர் முதற் சொல் உண்டு.

சில சொற்களின் ஈற்றில் யகரமெய் வருவதியல்பு.

(மொழிநூல் இலக்கணவியல் 59-வது பக்கம்)

(9) செந்தமிழ் நாடு

தமிழ், மற்றைய கிரகங்களின் நடுவிலுள்ள சூரியனுலுண்டானமையின் செந்தமிழ்நாடும் மற்றைய நாடுகளுக்கு நடுவில் வைக்கப்பட்டது.

(மொழி நூல் பாயிரவியல் 57-ம் பக்கம்)

(10) புணர்ச்சி. அதாவது சந்தி.

இது மிக அருமையானது.

மொழிநூல் இலக்கணவியல் 85-வது பக்கம் புணர்ச்சி முற்றும் பார்க்கவேண்டும்

(11) சொற்களுக்குப் பொருள் கொள்ளும் வகை.

1. வேழம்:—

1. மூங்கில்

2. கரும்பு. மூங்கிலினமென்பது.

3. கொறுக்கை.

4. யானை. மூங்கில்போலும் துளைக்கையுடையது.

வேல்—வேள்=கொறுக்கை.

வேள்—வேளம்—வேழம்.

2. வംശഃ:—

1. மூங்கில்

2, புல்லாங்குழல். புல்=மூங்கில்

3. பிரம்பு. மூங்கிலினமென்பது.

4, வரிச்சல்., மூங்கில் வரிச்சல்

5. குலம்., மூங்கில்போலும் கிளைப்பது.

வமிசம்—வம்சம்—வംശഃ

(மொழிநூல் இலக்கணவியல் 147-ம் பக்கம்)

மொழிநூலில் அபிப்பிராயம் முழுதும் வரவில்லை. இனி எழுதப் படும் மொழிநூல்விளக்கத்தில் எல்லாம் விளக்கமாகும். அதனை ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கவேண்டும்.

துவாவிம்சதிசுருதியின்பொதுக்குறிப்பு*

தாகத்திற்குதவாத கடல்நீரை மேகமானது கிரகித்து உலகத்தார் உண்ணத்தகுதியுள்ள சுத்தஜலமாக வருஷிப்பதுபோல அறிவுடைய பெரியோர் இதில்காணும் குறைகளையும் நிறையுடையவைகளாக்குவா ரென்று துணிந்தே இவைகளைச் சொல்லத்துணிந்தேன்.

கிளைகளிலும் இலைகளிலும் தாட்டிமுட்களையுடைய ரோஜா, ராஸ்பரி முதலிய செடிகளை அதில்கிடைக்கும் புஷ்பத்தையும் பழத்தையும் உத்தேசித்து அதைப்பேணுவார்போல தாங்களும் என்வார்த்தைகளை அங்கீகரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

உலகில் சிறப்புற்றோங்கிய கலைகளில் யாவராலும் பெருமையாகக் கொண்டாடப்படுவது சங்கீதமே. இந்தியாவின் சங்கீதத்தில் வழங்கி வரும் சுருதிகள் இன்னின்னவென்று சொல்லும் சில வித்வசிரோமணிகளின் அபிப்பிராயங்கள் ஒன்றற்கொன்று ஒவ்வாமல் பலபலவாயிருக்கின்றன. அவர்களில் சிலர், தாங்கள் எழுதும் புஸ்தகத்தில் இவைகள் இந்துஸ்தானி சங்கீதத்திற்கேயுரிய சுருதிகளென்று திட்டமாய்ச் சொல்லுகிறார்கள். ஆனால், அவ்விந்துஸ்தானி சங்கீதத்துக்குரிய சுருதிகளைத் தாங்கள் சாரங்கதேவர்முறைப்படி கண்டுபிடித்தோமென்று சொல்வது, முற்றும் ஒவ்வாத காரியம். அப்படிப்பட்ட சுருதிமுறைகளைத் தென்னிந்திய சங்கீதத்தில் வழங்கிவரும் சுருதிகள் என்று சிலர் சாதிக்கிறார்கள். ஆகையால் தென்னிந்திய சங்கீதத்தின்மகிமையை அறியாதசிலருக்கு உண்டாயிருக்கும் சந்தேகத்தைநீக்குவதற்கென்றே இந்நூல் எழுதப்பட்டது.

இப்பரதகண்டம் மிக விலாசமாய் இயற்கை அமைப்பின் செல்வம் யாவும் நிறைந்துள்ள தேசமாயிருந்ததினால் பலபல ராஜ்யத்தாரும் பலபல ஜாதியாரும் விரும்பக்கூடியதாயும் தங்களுக்கு வேண்டியகாரியங்களை விருத்திசெய்வதற்கேற்ற உத்தமஸ்தலமாயுமிருந்ததென்று நாம் அறிவோம். இதுகாலக்கிரமத்தில், பற்பல ஜாதியாரும் மார்க்கத்தாரும் பாஷைக்காரரும் தங்கும்படியான இடமாயிற்று. அவர்கள் தங்கள்

*இது மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் பதின்மூன்றாம்வருஷக்கூட்டத்தில் வாசிக்கப்பெற்றது.

தங்களுக்குரிய மதங்களையும் சாஸ்திரங்களையுமே இங்கு விருத்தி பண்ணினதினால் இவ்விந்தியாவின்பூர்வகலைகள் வரவர ஆதரிப்பாரற்றுப்போயின. வெகுபூர்வமாயுள்ளகலைகள் சில முழுதும் மறைந்துபோயின. வேறுசில பழங்கதைகள்போற் சொல்லப்படுகின்றன. மற்றும் சில தமக்குரிய ஆதாரவிதிகளும் நூல்களும் அழிந்து குற்றுயிராய் நிற்கின்றன. அவைகளுள் சங்கீதமும் ஒன்றென்று மிகவும் விசனத்தோடும் சொல்லவேண்டியதாயிருக்கிறது.

இயற்கையாய் உண்டான இவ்வாபத்தோடு, எடுத்துநிறுத்த வந்த சிலரால் சந்தேகம் ஒன்றுக்குப் பத்தாகிச் சங்கீத சாஸ்திரமானது கலக்க மிகுந்த நிலைக்கு வந்திருக்கிறது. காலக்கிரமத்தில் இப்படிப்பட்ட தவறுகள் ஒன்றோடொன்று கலந்து விதி தப்பி வழங்குவதினால் இதுதான் சாஸ்திரப்பிரமாணமென்று நிச்சயம்சொல்லக்கூடாத நிலைக்கு வருவது இயல்பே.

என்றாலும், அவரவர் தங்கள்தங்கள்பரம்பரைக்குப்போதித்து வரும் கீதமுறைமை நெடுநாள் நீடித்திருக்கவேண்டுமானால் பூர்வ முறைகளையும் கீதங்களையும் நுட்பமாய் ஆராய்ச்சிசெய்து, அவைகளுக்குரிய பொதுவிதி சிறப்பு விதிகளை விபரமாக பின்னடியாருக்கு எளிதில் விளங்கத்தக்கதாக எழுதிவைத்தல்வேண்டும். மற்றப்படி அவைகள் நிலைத்திராமல் ஒன்றோடொன்றுகலந்து யாசிப்பவன்பைபோல் நவதானிய பாத்திரமாகிவிடும்.

அப்படிச் சீரழிந்தஒன்றைப் பழையபடி நன்னிலைக்குக்கொண்டு வருவதும் ஒழுங்கு ஏற்படுத்துவதும் மிகவும்கஷ்டமான காரியமாம். இந்தியாவின் சங்கீதத்தில் மிகவும் அருமையானதென்று மற்றவரால் கொண்டாடப்படும் தென்னிந்திய சங்கீதமானது இந்துஸ்தானி, பார்சி முதலியவைகளின் கலப்பால், மார்க்கமாகிய வரன்முறை இழந்து பெரும்பாலும் தேசிகமாகி சந்தேகிக்கத்தகுந்த நிலைக்கு வந்திருக்கிறது.

சங்கீதத்தைப்பற்றி எழுதிய நூல்களுள் அகஸ்தியர் நாரதர் முதலிய மகான்களால் செய்யப்பட்ட அகத்தியம், பஞ்சபாரதீயம், பெருநாரை, பெருங்குருகு, முதலிய தமிழ்ப்பூர்வநூல்களும், இற்றைக்குச் சுமார் 8000-வருஷங்களுக்குமுன், முதல் ஊழியின் இறுதியில் அழிந்துபோயின. தென்மதுரை கடல்கொள்ளப்பட்டகாலத்தில் அழிந்து

போன பலநூல்கள்போக மீதியானசில நூல்களும் கபாடபுரம் கடலாலழிக்கப்பட்டகாலத்தில் அழிந்துபோயின. பூர்வ சங்கீதநூல்களில் எஞ்சிநின்ற சிலசூத்திரங்கள் இற்றைக்குச்சுமார் 1800-வருஷங்களுக்கு முன்னுள்ள பழைய தமிழ்நூல்களிலும் அவற்றின் உரைகளிலும் காணப்படுகின்றனவேயன்றி, முற்றும் ஆதியோடந்தமாய்த்தெரிந்து கொள்ளக்கூடியதாயில்லை. இருந்தாலும் அச்சூத்திரங்களை உற்று நோக்குகையில் சங்கீதம் ஒருகாலத்தில் மிகஉன்னதமான நிலையிலிருந்த தாகத் தெரிகிறது.

இதுதவிர, சமஸ்கிருதபாஷையில் மிகவும் பாண்டித்தியமுடையவரும் காஸ்மீரதேசவாசியுமாகிய சாரங்கதேவரால், இற்றைக்குச்சுமார் 700-வருஷங்களுக்குமுன் எழுதப்பட்டுள்ள 'சங்கீதரத்னகரம்' என்னும் நூலே இந்தியசங்கீதத்தைத்தெரிவிக்கும் முக்கியநூலாக எண்ணப்பட்டுவருகிறது. இந்நூலை எழுதினவரும், தமக்கு 700-வருஷங்களுக்கு முன்னுள்ள பரதர்எழுதியநூலை மேற்கோளாக அனுசரித்து எழுதின தாகச்சொல்லுகிறார். அதுவும் பிரமபுத்திரராகிய நாரதருடைய முறையையும் வாயுபுத்திரரான அநுமார் அல்லது ஆஞ்சநேயர் முறைகளையும் அனுசரித்து எழுதப்பட்டதாயிருக்கவேண்டும்.

வீணகானவிநோதினியாகிய சரஸ்வதிதேவியாரும், பிரமபுத்திரரான நாரதரும், வாயுகுமாரனை ஆஞ்சநேயரும், வைணிக சிரோமணிகளென்று நாமெல்லோருமறிவோம். 'சங்கீதரத்னகரம்' எழுதிய சாரங்கதேவருக்குப்பின் 'சுரமேளகளாநிதி' எழுதிய ராமாமாத்தியாரும் 'ராகவிபோதம்' எழுதிய சோமநாதரும், 'சங்கீதபாரிஜாதம்' எழுதிய அகோபிலரும், 'சங்கீதரத்னகரம்' என்னும்நூலை அனுசரித்தேஎழுதியிருக்கிறதாகச்சொல்லப்படுகிறது. என்றாலும், சுருதிவிஷயத்தில் சில அபிப்பிராயபேதமிருக்கிறதாய்த் தெரிகிறது. அப்படி எழுதப்பட்ட நூல்களில் சங்கீதத்திற்குதவியான தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவிமுதலிய வாத்தியங்களின் லக்ஷணங்களை மிக விரிவாகச் சொல்லியிருந்தாலும், சங்கீதத்திற்கு முக்கியஆதாரமான சுருதிகளைப்பற்றித் திட்டமாய் அறிந்துகொள்ள ஏதுவில்லாமல் எழுதியிருக்கிறது. அவ்விஷயமாய் அவர்களால் எழுதப்பட்ட சொற்பமாகவும் அநேகம்பேர் வெவ்வேறுவிதமாகத் தம்தம் அறிவுக்கேற்றபடிபொருள் செய்துகொள்ளக்கூடியதாயிருக்கிறது.

முதல்நூலுக்குப்பின்னுள்ள நூல்கள், வேறுசில அபிப்பிராயங்களையும் கலந்துசொல்வதாகவும் தெரிகிறது. தற்காலத்தில் இந்திய சங்கீதத்தில் பிரீதியுள்ளசிலர் தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்குஎன்ற நாலுதிசையார் வழங்கும்கீதங்களையும் ஒன்றுசேர்த்து, அவைகளில் வரும் சுரங்களையே இந்தியசங்கீதத்தின் சுருதிகளென்றுசொல்லுகிறார்கள். இதுவரையும் இந்தியசங்கீதத்தின் சுருதிகளைப்பற்றி, 'சங்கீத ரத்னாகரம்' செய்த சாரங்கதேவர், 'ஸ்வரமேளகளாநிதி' எழுதிய ராமாமாத்தியார், 'ராகவிபோதம்' எழுதிய சோமநாதர் 'சங்கீதபாரிஜாதம்' செய்த அகோபிலர், Poona Gayan Samaj Honorary Secretary சகஸ்ரபுத்தி, இந்தியசங்கீதவிருத்திக்காக மிகவும் பிரயாசையெடுத்துக்கொண்ட Sir Rajah Surendra Mohana Tagore, Mr. கோபால்ராவ் கணபதிராவ் பார்வ் அவர்களும், Dr. பண்டார்கார் அவர்களும், Retired Deputy Collector K. B. Deval அவர்களும், Belgaum E. Clements C. S. துரையவர்களும், School Inspector Rao Bahadur C. Nagoji Rao அவர்களும், கர்நாடகசங்கீதத்தை English staff notationல் கொண்டுவரும்படிபிரயாசையெடுத்துக்கொண்ட A. M. சின்னசாமிமுதலியார், M. A. அவர்களும், பிரம்மஸ்ரீ பிரதாபராமசாமி பாகவதரவர்களும், பிரம்மஸ்ரீ பஞ்சாபகேசபாகவதரவர்களும், பிரம்மஸ்ரீ S. சுப்பிரமணியசாஸ்திரியவர்களும் எழுதியிருக்கிறார்கள். அவர்கள் எழுதியவற்றுள் ஒன்றற்கொன்று ஒவ்வாதிருப்பதையறிந்தே இதை எழுதத்துணிந்தேன்.

தென்னிந்திய சங்கீதத்தின் பெருமையையும் அழகையும் விஸ்தாரத்தையும் பழமையையும் விவரித்துச்சொல்ல, நான் எம்மாத்திரம்? அநேகவருஷங்களாகச்செய்துவந்த வெகு நுட்பமான ஆராய்ச்சியின்மேல் தென்னிந்திய சங்கீதத்தில் வழங்கிவரும் சுருதிகள் வெகு முக்கியமானவையென்றும், புதிதாக ஒருராகமுஉண்டாக்கவும் பழமையான ஒன்றைத் திருத்திக்கொள்ளவும்கூடிய இராகவிதிகளடங்கிய ரகசியம் மேலானதென்றும் இவ்விரண்டும் மறைந்தபின் தென்னிந்தியசங்கீதம் விருத்தியடையாமல் குன்றிப்போனதென்றும் அறிந்தேன். நான் அறிந்த சிலரகசியங்களை வெளிப்படுத்தியும், இதுபோல் மற்றவர்கள் சங்கீதவிஷயமாய்த்தெரிவிக்கும் உண்மைகளைச் சபையோர் அறியப் பிரசங்கித்தும் தென்னிந்தியசங்கீதத்தை முன்னுக்குக்கொண்டுவரவேண்டுமென்ற ஆவலுடன் சங்கீதவித்யாமகாஜனசங்கம் என்ற ஒரு

சபையும் கூட்டினேன். கனவான்களே, நான் இப்படிச்சொல்லுவதை மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். ராகங்களையும் ராகங்களில் வழங்கிவரும் சுருதிகளையும் நிச்சயம்செய்துகொண்டுவருகையில் கர்நாடகசங்கீதத்திற்கே முழுதும் ஒவ்வாததான துவாவிம்சதி சுருதிகளென்று தாங்கள் நினைக்கும் சிலஒழுங்கற்ற சுரஸ்தானங்களைப் பலர் சொல்லஆரம்பித்தார்கள். தங்கள் அனுபோகத்தில்பாடிவரும் சுரஸ்தானங்கள் இன்னவென்று அறிய முயற்சிக்காத சிலவித்வசிரோமணிகளுக்கு, சமஸ்கிருதத்தில் பயிற்சியுள்ள மற்றவர்கள் சுருதியைப்பற்றி செய்யும் ஆடம்பரம், மிகவும்மயக்கத்தையுண்டாக்கி, தென்னிந்திய சங்கீதத்தின் மேன்மையை அழித்துவிட ஏதுவாயிருக்குமென்று நினைத்து எழுதினேன்.

சுருதியைப்பற்றி இதன்முன்னெழுதிய Mr. Deval, Mr. Clements, Mr. Bandarkar, Sir Rajah Surendra Mohana Tagore முதலிய வடதேசகனவான்கள் தாங்கள்எழுதிய சுருதிகள் இந்துஸ்தானி சங்கீதத்திற்கேஎன்று சொல்வதினால் அவைகளைப்பற்றி நான் கொஞ்சமாவது ஆக்ஷேபிக்கவில்லை. ஆனால், இது சாரங்கதேவருடைய அபிப்பிராயமென்று அவர்கள் சொல்வதை நான் முற்றும் ஒப்புக்கொள்ளவில்லை.

இந்துஸ்தானி கீதத்திற்கு எழுதியதாகச்சொல்லப்படும் மேற்கண்டகனவான்களின் சுருதிகளைச் சற்றேறக்குறைய அப்படியே எடுத்துக்கொண்டு இவைகளே கர்நாடகசங்கீதத்தில் வழங்கிவருகிற சுருதிகளென்றுசொல்லும்சிலகனவான்களின் சந்தேகங்களைநீக்கி,தென்னிந்திய சங்கீதத்தில் வழங்கிவரும் சுருதிகளின் யதார்த்தநிலையை எல்லோரும் அறிந்துகொள்ளவேண்டுமென்றே இது முக்கியமாய் எழுதப்பட்டது.

உள்ளதை உள்ளதென்றுசொல்வது கடினமல்ல. ஆனால், உள்ளது அறிந்துகொள்ளமுடியாமல் மெலிந்துநிற்கும் ஆபத்தான நிலையில், அதனை அறிந்ததுபோல் நடித்து உரைக்கும் பொய்வார்த்தையும் தீங்குவிளைவிக்குமேயென்று அனுதாபப்பட்டு விரித்தெழுத நேரிட்டது.

ஒரு ராகத்தின் ஆரோகணம், அவரோகணங்கள் வக்கிர வர்ஜிய பேதங்களுடையவாயிருந்தாலும் ஒரேசுருதியுள்ள சுரங்களாக வரவேண்டுமென்ற மார்க்கவிதியிருக்க, ஆரோகணத்திலொரு சுருதியும்

அவரோகணத்தில் வேறொரு சுருதியுமாகப்படித்து கர்நாடகசுத்தத்தைப் பாழ்படுத்திக்கொண்டுவருகிறவர்கள். தாங்கள் பழகிய சில அபசுரத்துக்குத் தகுந்தவிதமாய் ஆரோகணத்திலொன்றும் அவரோகணத்திலொன்றுமாகவரும் துவாவிம்சதி சுருதிகளின் முறையையும் சேர்த்துக்கொண்டால், கர்நாடகசங்கீதத்திற்கு வேறென்ன அனர்த்தம் வேண்டும்! பரம்பரையாய்க் கேள்விமூலமாய்க் காப்பாற்றப்பட்டு வரும் தென்னிந்திய சங்கீதத்தைக் கற்றுவரும் வித்வசிரோமணிகளுக்கு சுருதிகளைப்பற்றி இனி ஒருக்காலும் கலக்கம் உண்டாகாதிருக்கவேண்டுமென்பதே இந்நூலின் முக்கியநோக்கம்.

சுருதியைப்பற்றித் தற்காலத்தவர் அபிப்பிராயம் சாரங்கதேவரின் அபிப்பிராயத்திற்கு முழுதும் ஒத்ததல்லவென்று முதல்முதல் நிச்சயம் செய்துகொண்டு, அதன்பின் தென்னிந்தியசங்கீதத்தில் வழங்கிவரும் சுருதிகளை நிச்சயம்செய்து, மேற்காட்டியவர்கள் சொல்லும் சுருதிகள் அவைகளுக்கு ஒத்துவராவென்று தள்ளவேண்டும். தென்னிந்திய சங்கீதத்தில் வழங்கிவரும் சுருதிகள், மிக நுட்பமானவைகளும்யாவராலும் ஒப்புக்கொள்ளக்கூடிய கிரமமுடையவைகளுமாயிருக்கின்றனவென்று நாம் அறியலாம். அவைகள் மிகப் பூர்வமானவைகளென்றும், நம்முன்னோரபிப்பிராயத்திற்குப் பொருந்தியவைகளென்றும் தற்கால நாகரீகத்திற்கும் இனி எக்காலத்திலும் வரக்கூடிய தேர்ச்சிக்கும் மேலானவைகளென்றும் நாம் காண்போம். ஆகையினால், அவைகளின் பூர்வத்தையும் மேன்மையையும்பற்றிச் சரித்திரசம்பந்தமாய்ச் சிலகாரியம் நாம் தெரிந்துகொள்வது மிக அவசியம். சங்கீதவிஷயத்தில் நான் அறிந்த சிற்சில விஷயங்களைப் பற்பல புத்தகங்களாக வெளியிட நினைத்து எழுதிவருகிறேன். அவைகளில் சுருதிவிஷயம் மிக முக்கியமானதால் அதையே முதற்புத்தகமாக்கிக்கொள்ள நேரிட்டது.

(இன்னும்வரும்.)